காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

5—12—71

★

உள்ளே......

ஆசியாவுக்கு அமைதியுண்டா ?
(தலையங்கம்)

மணல் வீடு!
(சிறுகதை)

தமிழ்ப் போற்றி!
(மொழிக் கட்டுரை)

வாதமென்ன வைத்தீர்கள் வம்பர்களே!
(சிறப்புக் கட்டுரை)

சோழமாதேவி
(தொடர்கதை)

விலை 25 காசு

சொல்லுவதென் சிட்டே?

(கருமலைப் பழம்நீ)

கண்முன்னே கொடிமடியில் குந்திக் கொண்டு
கவின்கழுத்தை அசைத்தசைத்துப் பக்கம் பார்த்தே
எண்ணமெனும் தேரேறிப் பறக்கா வண்ணம்
எனைநிறுத்திச் சொல்லுவதென் சிட்டே? நீதான்,
பெண்ணடிமை தமிழ்நாட்டில் ஒழிந்த தென்றும்;
பொன்னாட்டில் தமிழுக்கே முதன்மை என்றும்;
அண்டைநன் நாடெல்லாம் போற்றும் வண்ணம்
அருந்தமிழே சிறந்ததென்றும் சொல்கின் றாயோ?

தமிழ்நாட்டில் தமிழ்ப்பகைவர் மாண்டார் என்றும்;
தமிழ்பேசும் மக்களுள்ளே வளர்ந்த சாதி
உமிபோலும் நீங்கநலம் அடைந்தார் என்றும்;
உரமிக்கத் தமிழ்மக்கள் ஒன்று கூடி,
அமிழ்தூறும் குறள்வழியில் நடந்தார் என்றும்;
அருந்தமிழைக் கற்றபெரும் புலவ ரெல்லாம்
தமிழ்மொழியை முதல்வைத்தே உயரா வண்ணம்
தமிழ்வளர்த்தார்; என்றெல்லாம் சொல்கின் றாயோ?

செல்வத்தில் உயர்ந்தநாடு! இல்லை என்ற
சொல்லுக்கே இடமின்றி வாழும் நாடு!
கல்விக்கோர் திருநாடு! என்றும்; சங்கக்
காலத்துச் சிறப்பெல்லாம் மீண்டும் பெற்று
பல்கலைகள் பயில்நாடு! சோம்ப லின்றிப்
பகலிரவாய் உழைக்கின்ற தமிழர் கூட்டால்
நல்லுணர்வு கொண்டோங்கும் நாடு! என்றும்
நற்சிட்டே! என்காதில் சொல்கின் றாயோ?

சிறுகதை!

மணல் வீடு

(முத்துப்பிரியன்)

உண்மையில் நான் வீட்டை விட்டுப் புறப்படும் பொழுது கோட்டை மைதானத்தில் காந்தி சிலேக்கு அருகே சரவணனை சந்திக்கப் போகிறேன் என்று நினைக்கவேயில்லே.

எதிர்பாராத சந்திப்பு அது!

மூன்ருண்டுகளுக்குப் பின்னே— ஆசைக் கனவுகளுக் கெல்லாம் அடித்தளம் அமைத்துத் தந்த எண்ணங்களை, வெறும் செத்துப் போன நினைவுகளாக ஒதுக்கி வைத்துவிட்ட பிற்பாடு — இன்று தான் நான் அவரைப் பார்க்கிறேன்.

ஆளே மாறிவிட்டிருக்கிருர். வாழ்க்கையில் முற்றிலும் ஊறிவிட்டது போன்றதொரு ஆயாச நிலையை அவரிடம் என்னல் காண முடிகிறது. சிந்தித்துச் சொற்களையுதிர்க்குந் திறனும், நெற்றிச் சுருக்கங்கள் ஒன்றை யொன்று அணைத்துக்கொள்ள பிறர் பேசுவதை கூர்ந்து கவனிக்கும் அந்தத் தனி அழகும் இன்று ஏனே காணேம்.

பாவம், 'மனச் சாந்தி' என்றுச் சொல்லிக்கொண்டு உருவாக்கிக் கொள்ளும் ஒருவகையான வாழ்க்கையில் நுழைந்த பிற்பாடு மனிதன் எப்படி மாறிப் போகிருன்!

"உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டதாகக் கேள்விப்பட்டேன்..." தூரத்தில் போய்க்கொண்டிருக்கும் டவுன் பஸ்களையும் சைக்கில்களையும் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தவர் நான் சொன்னதைக் கேட்டதும் என்னைத் திரும்பிப் பார்த்து லேசாகத் தலையசைத்தார்.

"உங்க மனைவி இங்கேதான் இருக்காங்களா?..." என்று கேட்டேன்.

"இல்லே அவங்க ஊரிலே ஏதோ திருவிழான்னு அழைச்சுட்டுப் போயிருக்காங்க..."

"குழந்தைங்க ஏதாச்சும்?..."

இப்படி நான் கேட்டதும் இல்லையென்பதுபோல் அவர் சிரித்தார். நானும் லேசாகச் சிரித்தேன்.

இரு வேறுபட்ட சிரிப்பு!

"கல்யாணமாகி மூணு வருஷமாச்சேன்னுதான் கேட்டேன்..."

கொஞ்சநேரம் மௌனமாக நின்றிருந்தவர் சற்றுத் தலையைக் குனிந்துக்கொண்டே சொன்னர்: "விஜி, என் வார்த்தைகளின்மேல் உனக்கு எப்பவுமே நம்பிக்கை இருக்கறதில்லே..."

எனக்கு சிலிர்த்துக் கொள்கிறது! இதே மாதிரி வார்த்தைகளை, என்ருே ஒரு நாள், யாரோ எனக்குச் சொல்லியிருக்கிருர்கள். நான் திரும்பிப் பார்க்கிறேன் — நடந்து போன நிகழ்ச்சிகளையெல்லாம் மெல்ல வெல்லத் திருப்பிப் பார்க்கிறேன் — என் நினைவுக்கு வருகிறது.

அன்று...

அன்றுதான் ஆக்ஸிலியம் பெண்கள் கல்லூரியின் கடைசி நாள். கூடப் படித்த அத்தனை சக தோழிகளையும் விட்டுப் போகிருேமே என்றப் பிரிவுச் சுமையோடு வெளியே வந்துகொண்டிருக்கிறேன். இருந்தாலும் யாரையோ எதிர்பார்க்கும் பாவனையில் எதிரேயும் பக்கத்திலேயும் போகும் பெண்கள் கூட்டத்தை விட்டு என் கால்கள் பின்னே நிற்கின்றன.

கழுத்துப் பக்கமாக கசிந்து நிற்கும் வேர்வையை சேலைத் தலைப்பால் துடைத்துக்கொண்டே எதிரே தெரிந்த புங்கை மர நிழலில் போய் நின்ற என்னுடைய காதுகளில் 'விஜி' என்று யாரோ மெல்ல அழைப்பது கேட்டது. திரும்பிப் பார்த்தேன்.

அவர்தான் வந்துக்கொண்டிருந்தார். அவருடைய கைகளிலே ஒரு சிறிய 'சாக்லட்' பெட்டி இருந்தது.

"ரொம்ப நேரமா நின்னுக்கிட்டிருக்கியா விஜி? எங்க போயிடுவியோன்னுதான் வேகமா வந்தேன்......" என்று சொல்லிக்கொண்டே என் கைகளில் 'சாக்லட்' பெட்டியைத் தந்தவர், "எதுக்கு ஒரு மாதிரியா யிருக்கே?..." என்றபடி என்னையே கொஞ்சநேரம் உற்றுப் பார்த்தார்.

"ஒண்ணுமில்லையே......" என்றேன்.

"இல்லே எதையோ மறைக்கிறே முகமெல்லாம் வீங்கிப் போயிருக்கு?" என்று கேட்டார்.

"சரவணன், இன்ருேடு என்னுடையக் கல்லூரி வாழ்வு முடிந்து விடுகிறது..." என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே என்னுடைய கண்களின் ஓரத்தில் சிலிர்த்து நிற்கும் கண்ணீர், பார்வையை மறைத்தது.

"பைத்தியம் இதுக்காகவா அழறே. உன்னேட கல்லூரி இல்லேன்ன நீயும் நானும் சந்திக்கவே முடியாதா? நான்தான் உனக்குக் கடிதம் எழுதறேன்னேன். நீயும் எனக்கு அடிக்கடி எழுது. இரண்டு பேரும் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ள இது போதாதா? ஒருத்தரை யொருத்தர் பார்த்துக் கொள்றதிலேயே உண்மைக் காதல் மறைஞ்சிருக்குன்ன அப்படிப்பட்டக் காதலையா நாம் உருவாக்கினேம்? மனசோட மனசு ஒன்றிப் போயிடுச்சின்ன பார்க்கவேண்டிய அவசியமே இல்லே. இது புரியாம அழுதிருக்கியே விஜி?..." என்றபடி கண்களைத் துடைத்துவிட்டார் அவர்.

அவர் அப்பொழுது சொன்ன வார்த்தைகள் எனக்குச் சற்று ஆறுதலாக இருந்தது.

"சரவணன், நான் வீட்டை விட்டு வெளியிலேயே வர முடியாது. நீங்கதான் உங்க அண்ணு இரண்டு பேர் கிட்டேயும் சொல்லி சீக்கிரமா எங்க வீட்டுக்கு வரணும்." என்றேன் நான்.

"நான்தான் உனக்கு முன்னமேயே சொன்னேனே விஜயா... ஊரீஸ் கல்லூரியிலே கண்டிப்பா எனக்கு 'டியூட்டர்' வேலே கிடைச்சுடும். கிடைச்சதுமே முதல் காரியமா நம்முடைய கல்யாணப் பேச்சைத்தான் ஆரம்பிப்பேன்..."

"அழகு, அறிவு இதையெல்லாம் பார்க்காம உங்களுடைய அன்பு ஒண்ணுக்காகவே நான் காதலிக்கிறேன். மனதாலும், வாக்காலும் செயலாலும் உங்க ஒருத்தருக்

(4-ஆம் பக்கம் பார்க்க)

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 13   ஆறுமாத சந்தா ரூ. 6-50

மலர் 8 | 5—12—71 | இதழ் 21

ஆசியாவுக்கு அமைதி யுண்டா?

இந்தியா—பாகிஸ்தான் நெருக்கடி இனி, எந்த நேரமும் ஒரு பெரும் போராக உருவாகிவிடக்கூடும் என்று நம்பக்கூடிய அளவுக்கு எல்லையிலிருந்து செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

இந்தியத் தரப்பில், இராணுவத்தினர், வங்காள தேசத்தில் ஹில்லி பகுதியை வசப்படுத்திக்கொண்டு விட்டிருக்கிறார்கள். காரணம் அப்பகுதி பாகிஸ்தான் இராணுவத்தினர் இந்திய எல்லைக்குள் ஊடுருவி வந்து, இந்தியாவைத் தாக்கியதே யாகும். இந்திய இராணுவ வீரர்கள், தாக்குதலை முறியடித்ததுடன் நில்லாது எதிரிகளை எல்லைக் கப்பால் துரத்தியதுடன் அன்றி, பாகிஸ்தான் பகுதியிலும் காலூன்றி நின்று கொண்டிருக்கிறார்கள்.

எனவே, ஒரு பெரும் போர் மூளக்கூடும் என்ற கணிப்பு, உலக நாடுகள் அனைத்திலும் ஒருமுகமாகக் கணிக்கப்பட்டு விட்டிருக்கிறது.

இந்நிலையில், உலக நாடுகள், இந்தியாவின்மீது தான் கட்டுப்பாடுகளை விதிக்கக் கருதுகின்றனவே யொழிய, இவ்வளவு நிலைமைகளுக்கும் காரணம் பாகிஸ்தான்தான் என்று நினைத்துப் பார்க்கக்கூட மறுக்கின்றன.

போர் நடைபெறக் கூடாது என்று எடுத்துக் காட்டுவதற்கு முன் வந்து மோதுகின்ற நாடுகளில் எதுவும், இப்போதைய இந்தப் போருக்குத் தேவையென்ன? எதனால் இந்த நிலை என்று எண்ணிப் பார்க்கத் தொடங்கினால்கூட, போர் நடைபெறாமல் போய்விடக் கூடும். ஆனால், உள்ளத்திலொன்றும், உதட்டிலொன்றுமாக உறவாடுகின்ற பலநாடுகள், இன்னமும் பாகிஸ்தானது இரட்டை வேடப் போக்கைப் புரிந்துகொள்ளாமலிருப்பது விந்தையாகவே இருக்கிறது.

கிழக்குப்பாகிஸ்தானில் உருவாகியஒரு அரசியல் நெருக்கடியே இவ்வளவுக்கும் காரணம் என்று ஏற்றுக் கொள்ளுவதற்கான தடை, எந்த வடிவிலே இருக்கிறது என்பதை உலகநாடுகள் உடனடியாக உணர்ந்தாக வேண்டும்.

பொறுமைக்கும் எல்லையுண்டு என்பார்கள். அதுபோலவே, பாகிஸ்தானிலிருந்து நிமிடத்துக்கு நிமிடம் வெளியேறி வந்து கொண்டிருக்கும் அகதிகளது எண்ணிக்கைக்கும் எல்லை இருந்திருக்கவேண்டும். இந்த எல்லையை நிர்ணயிப்பதுயார்?

உலகநாடுகள் இதைப்பற்றி எப்போதாவது சிந்தித்திருக்கிறதா? பாகிஸ்தான் அரசாங்கத்தால் நேரடியாகவும் மறைமுகமாகவும் உண்டாகிக் கொண்டிருக்கிற அனைத்துச் சங்கடங்களையும் தாங்கிக் கொண்டும், அகதிகளுக்கு உற்றுழி உதவிக் கொண்டும், இவைகாரணமாக உள்நாட்டு 55கோடி மக்களையும் வாட்டத்துக்கு ஆளாக்கி வைத்திருப்பதற்கும் யார் காரணம்?

இவை அனைத்துக்கும் ஆணிவேராக இருந்து கொண்டிருப்பது "பங்களாதேஷ்" விவகாரம் ஒன்றுதான்! இது தீர்வுக்குக் கொண்டு வரப்பட்டாலொழிய, உலக நாடுகள் விரும்புவதுபோல ஒரு போர்ச்சூழல் தடுக்கப்பட முடியாது—பாகிஸ்தானது இப்போதைய போக்கினால்.

சென்ற கிழமை கூட, பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் தனி நபர் ஒருவர், "பங்களாதேஷை" அங்கீகரிக்க வேண்டும் என்று கேட்டதற்கு, அது இயலாது என்று பிரதமர் ஹீத் பதிலளித்திருக்கிறார்.

இதுபோன்ற பதில்கள்தான் உலக நாடுகளின் வாயிலிருந்து வருமானால், பாகிஸ்தான் திருந்தப் போவதுமில்லை, ஆசியாக் கண்டத்தின் எதிர்காலம் அமைதியுடையதாக இருக்கப் போவதுமில்லை.

பாராட்டி, வரவேற்று, வேண்டுகிறோம்!

சென்னை மாநகராட்சியின் புதிய மேயராக சென்ற கிழமை, திருமதி காமாட்சி ஜெயராமன் அவர்களும், துணைமேயராக திரு. என். வி. என். - சோமு அவர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்.

திருமதி ஜெயராமன் அவர்களது தேர்வு, முன்கூட்டியே எதிர்பார்க்கப் பட்டதுதான். எனவே, மேயரையும், துணைமேயரையும் பாராட்டி, வரவேற்று, வாழ்த்துகிறோம்.

அதே நேரம், தமிழக அரசின் கவனத்துக்கும் மாநகராட்சி பற்றிய நமது கருத்தினையும் படைத்துக்கொள்கிறோம்.

ஒவ்வொரு முறையும், ஒவ்வொரு மேயரும் பதவியேற்றுக் கொள்கிற நேரத்தில் நெஞ்சங்களெல்லாம் மகிழும் வகையில் சில திட்டங்களை வெளியிடுவதென்பதும், அவற்றுக்காக சில முயற்சிகளை வெளிப்பட காட்டுவதென்பதும் வாடிக்கையாகி விட்டிருக்கிறது.

எடுத்துக் காட்டுக்கு ஒன்று கூற வேண்டுமானால் திருமதி ஜெயராமனுக்கு முன்பு பதவி வகித்த திரு. சா. கணேசன் அவர்கள் பதவி யேற்றபோது, சென்னை பிராட்வேயிலுள்ள பேருந்து நிலயத்தை மாற்றியமைக்கப் போவதாகத் தெரிவித்திருந்தார். பதவிக் காலத்தின் இறுதி நாள் வரையில் அதுபற்றி எதுவுமே தகவல் வெளியாகவில்லை.

ஒருவேளை, மேயரின் பதவிக் காலம், இதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள போதவில்லையோ என்று எண்ண வேண்டியிருக்கிறது.

எனவே இதுபோன்ற சில நல்ல கொள்கைகளையாவது செயல்படுத்த வாய்ப்பிருக்கும் வகையில், பதவிக்காலத்தை அதிகப்படுத்தும் முறையில் அரசு, சிந்திக்க வேண்டும். அதே நேரத்தில் மரபு என்பதன் பேரால் இதுவரையில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் இனஅடிப்படைத் தேர்வு முறை தேவைதானா? என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும்.

எத்தனையோ முற்போக்குத் திட்டங்களைச் செயல்படுத்தும் தமிழக அரசு, இதுபற்றியும் கொஞ்சம் கவனம் செலுத்துவது விரும்பத்தக்கதாகவும் இருக்கும்

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

காகவே நான் வாழ்ந்துக்கிட்டிருக்கேன். என்னை நீங்க மறக்கமாட்டீங்களே...'' என்று கேட்கும் போது என்னையு மறியாமல் என் கண்கள் நீரைச் சிந்தின.

"விஜயா, திரும்பவும் பைத்தியம் மாதிரி பேசறியே......என் வார்த்தைகளின் மேல் உனக்கு எப்பவுமே நம்பிக்கை இருக்கிறதில்லே...'' என்றார் அவர்.

சுற்றிலும் மெள்ள இருள் பரவத் தொடங்கியிருந்தது. தூரத்தில் தெரியும் மின்சார அலுவலகத்தை நோக்கி மெல்ல நடக்க ஆரம்பித்தோம்.

அன்று சந்தித்த அந்தக் கடைசிச் சந்திப்புக்குப் பிறகு—பேசிக்கொண்ட பேச்சுக்குப் பிறகு—இன்றுதான் முதன் முதலாக அவரைப் பார்க்கிறேன். யாரோ அதிகப் பழக்கமில்லாதவர்கள் பேசிக்கொள்ளும் பேச்சாகநாங்கள் வார்த்தைகளை வளர்க்கின்றோம்.

எந்தவிதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ளாத நிலையிலேயே, மூன்றாண்டுக்கால நீண்ட இடைவெளி எங்களிடையே உருவாகிவிட்டிருக்கிறது. சற்றும் நினைத்துப் பார்க்க முடியாத நிலையில், வெவ்வேறு கோணங்களில் நாங்களிருவரும் நிறுத்தப்பட்டிருக்கிறோம் என்பதை என்னால் உணர முடிந்தது.

'என் வார்த்தைகளின் மேல் உனக்கு எப்பவுமே நம்பிக்கை இருக்கறதில்லே...' என்று அன்று சொன்ன அதே வார்த்தையை இன்று அவரது வாயாலேயே கேட்கும்போது எனக்கு ஏதோவொரு மாதிரியாக இருந்தது.

காதலுக்கு முக்கியமாகத் தேவைப்படும் அந்த 'நம்பிக்கை' இனி என்னைப் பொறுத்தவரை தேவையில்லைதானே!

"இப்ப நீங்க என்ன செய்துக்கிட்டிருக்கீங்கன்னு சொல்லவில்லையே?...'' என்று கேட்டேன்.

"கல்லூரியிலே இருக்கேன்...''

"ஊரீஸ் கல்லூரியிலேயா?...''

"இல்லே, மேல் விஷாரம் அப்துல் ஹக்கீம் கல்லூரியிலே 'லெக்சர்'ராக இருக்கேன்...''

"'லெக்சர்'ராக இருக்கீங்களா? ரொம்ப சந்தோஷம். ஏதோ 'டியூட்டரா' இருப்பீங்கன்னு நெனச்சேன்...''

பொருள் பொதிந்த அந்த வார்த்தைகள் அவரை முள்ளாகக் குத்தியிருக்க வேண்டும்.

"உங்க மனைவிகூட வேலை செய்யறாங்களா?...''

இப்படி நான் கேட்டதும் அவரிடையே ஏற்பட்ட பரபரப்பும் அதன் பின்னணியிலே இயைந்த கலக்கமும் அவரிடையே ஒரு புதிய நிலையை உருவாக்கி வைத்தன.

முகத்தில் அரும்பி நின்ற வியர்வைத் துளிகளைத் துடைத்துக்கொண்டவர், "விஜயா, என்னை நீ பார்த்ததுமே 'இப்படி ஏமாற்றிட்டிங்களே...... இன்னொருத்தியைக் கட்டிக்கிட்டு எனக்குத் துரோகம் செய்திட்டிங்களே'ன்னு கோபப்படுவேன்னுதான் நெனச்சேன். ஆனா எதையுமே கண்டுக்காம இப்படி அமைதியா இருக்க உன்னால எப்படி விஜி முடியுது? நிதானமா ஒவ்வொரு கேள்வியா கேட்டுக்கிட்டு பொறுமையா இருக்கறதைப் பார்க்கிறப்ப எனக்கு எவ்வளவு ஆச்சரியமா இருக்கு தெரியுமா?...என்று பேச்சைமாற்றினார்.

நான் கலகலவென்று சிரித்தேன்.

"பழசாகிவிட்ட எண்ணங்களை நினைத்துப் பார்ப்பதிலேயும் சரி—கேட்பதிலேயும் சரி எந்தவிதப் பயனு மில்லேங்கறது எனக்குத் தெரியும்...'' என்றேன்.

"தப்பு விஜி. உனக்குத் துரோகம் செய்யணும்னு நான்எப்பவுமே நினைச்சதில்லே. என்றாவது ஒரு நாள் உன்னைச் சந்திப்பேன்னுதான் காத்துக் கிடந்தேன். உன்னைப் பார்த்ததும் என்னோட நிலையை விளக்கி, நான் செய்தது எப்படிப்பட்ட காரியம்னு உன் வாயாலேயே கேட்கணும்னுதான் எதிர்பார்த்தேன்...''

நான் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

"விஜயா, நான் உன்னிடம் முன்னமேயே சொல்லியிருக்கேன், என்னுடைய முறைப்பெண் ஒருத்தி டீச்சரா இருக்கான்னு. ஒருநாள் ஏதோ சிலிண்டர் வெடிச்சி முகமெல்லாம் கருகிப் போயிட்ட நிலையில் ஆஸ்பத்திரியிலே அவளைச் சேர்த்திருக்கிறதா தந்தி வந்தது. ஓடிப்போய் பார்த்தப்ப ஒரே கோரமாக இருந்தது. கண்கள் இரண்டையுமே எடுத்திட்டிருந்தாங்க. வாழ்க்கையே அஸ்தமித்துப் போச்சேன்னு அவ கதறினா. அப்பத்தான் விஜி எனக்கு அந்த எண்ணமே வந்தது. இழந்துவிட்ட அவளுடைய கண்ணாக இருக்கவேண்டுமென்று நான் அவளை மணந்துகொண்டேன். என் செயல் எனக்கு ஒரு பெரிய ஆறுதலா இருந்தது. உன்னைச் சந்தித்து இது எல்லாத்தையும் சொல்லணும்ன்னு நினைச்சேன். ஆனா உன்னைச் சந்திக்க மனம் இடங்கொடுக்கலே. இது பற்றித் தெரிஞ்சா நீயே என்னை வாழ்த்துவேன்னுதான் காத்திருந்தேன்..........'' என்று சொல்லிக்கொண்டே வந்தவர் கொஞ்சம் இடைவெளி விட்டு, "ஆனாலும் விஜி...உன்னை என்னால் மறக்கவே முடியலே......நாளைக்குப் பார்க்க மாட்டோமா? நாளைன்னிக்கி பார்த்துடமாட்டோமான்னுதான் ஒவ்வொரு நாளா கழிச்சிட்டிருக்கேன்...'' என்றார். அவருடைய கண்களில் நீர் முட்டி நின்றது.

வாழ்க்கைக் கோட்டில் வெவ்வேறு பக்கமாகப் போய்விட்ட எங்களிருவரில் அவர் செய்திருக்கும் காரியம் எத்தனை பெரிய தியாகம் என்பதைஎன்னால்உணரமுடிந்தது.

"சரவணன், ஆத்துப்பக்கமா போகின்ற குழந்தைங்க மணல் வீடு கட்ட ஆரம்பிக்குது. கண்டிப்பா நிலைச்சுநிற்குங்குற நம்பிக்கை அவங்களுக்குள்ளே இருக்கத்தான் செய்யுது. ஆனா கொஞ்ச நேரத்திலே அந்த நம்பிக்கை இடிந்து மணலோடு மணலாப் போயிடுது. அதுக்காக வருத்தமோ—இல்லே, அதை நெனச்சி வேதனையோ படறதில்லே. அதுபோலத்தான் காதலும். ஏதோ நம்பிக்கைங்கற ஒண்ணை நாம இரண்டு பேருமே வச்சோம். ஆனா அது பிள்ளைங்கக் கட்டின மணல் வீடு மாதிரி கொஞ்சநேர நினைவா போயிடுச்சி. ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சிக்கக் கலந்து பழகறது நல்லதுதான்; ஆனால் மனம் கலந்துகிட்டு இருக்கிற அந்த நேரத்திலே உடல் கலந்துடப்படாது. உடல் கலப்பு ஏற்பட்டுப்போன பின்னாலே, அது காதலாகவும் இருக்கிறதில்லே; கல்யாணத்திலே அது முடியலேன்னா, அப்புறம் வாழ்க்கையாகவும் இருக்கிறதில்லை. நீங்களோ, நானோ உள்ளத்தால் மட்டுமே கலந்திருந்தோம்! பிரிவு ஏற்பட்டபோதுகூட இரண்டு பேருமே களங்கப்படலே! காதலிக்கிறவங்க அத்தனைப் பேருமே இப்படி இருந்துட்டா, தோல்வி ஏற்பட்டாகூட, துவள வேண்டியதில்லே—என்னைமாதிரி! எனக்குக் காதல்லே தோல்வி ஏற்பட்டுட்போச்சு. அதுக்காக மனசைப் போட்டுக் குழப்பிக்கலே. உங்களுக்கு ஒரு மனைவியிருக்காங்க. எனக்குன்னு ஒரு வாழ்க்கையிருக்கு. அதைப் பூர்த்தி செய்யறதிலேதான் இனி இரண்டு பேருடைய கடமையுமே அடங்கியிருக்கு...'' என்று சொன்னேன் நான்.

என் வார்த்தைகளைக் கேட்ட பிறகு மேற்கொண்டு அவரால் எதையுமே பேச முடியவில்லை. இருந்தாலும் மறந்துவிட்ட ஏதோ

(15-ஆம் பக்கம் பார்க்க)

சோழமாதேவி

ராஜிமணாளன்

[34]

இரத்தினா என்ன ஆனாள் ?

எள்ளாளச் சோழப் பேரரசர் புழுவாய்த் துடித்துக் கொண்டிருந்தார். சோழ அரசி தியாகவல்லி தேவியாரும் துவண்டார். எவ்வளவு சிறப்புக்குரிய பேற்றினைத் தாங்கள் இழந்துவிட்டோம் என்று எண்ணி எண்ணி குமைந்தார்கள்.

ஆமத்திய மகாதேரர் அவர்களே, நேரில் வந்து அழைத்துவிட்டுப் போனாரே! தனது ஆட்சிக் காலத்தில் கூடுகின்ற முதலாவது மகாசபைக் கூட்டமாயிற்றே அது! இதற்கு முன்பு நான்கு மகாசபைக் கூட்டங்கள் கூடியிருந்தாலும், அவை பௌத்தத்தின் பொதுநிலைமைகள் பற்றியே ஆராய்ந்து, திட்டங்கள் வகுத்துச் செயல்பட முடிவெடுத்துக் கலைந்திருக்கின்றன. ஆனால் இப்போதைய இந்த ஐந்தாவது மகாசபைக் கூட்டத்தின் முன்பு கொண்டு வரப்பட்டுள்ள பிரச்னைகள்? கூட்டப்பட்டுள்ளதின் நோக்கம்? ஆமத்தியர் கொண்டுள்ள இலட்சியம்?

அடடா! நேரில் இருந்தல்லவா அவைகளைக் கண்டிருக்க வேண்டும்! அனுராதபுரத்தைப் பற்றியும், இங்கே தமிழர்களது ஆட்சி பற்றியும்கூட பிரச்னைகள் கொண்டு வரப்பட இருப்பதாக ஆமத்தியர் கூறி இருந்தாரே! ரோகணரடாவுக்கு ஆதரவாக சில தேரர்கள் வெளிப்படையாகவே பேசவும், செயல்படவும் முன்வந்திருக்கிறார்கள் என்று கூறி, அவர்களது ஆதரவு மிகுந்ததன் காரணத்தை எடுத்துக் கூறக் கூட அந்த மகாசபைக் கூட்டத்தில் தயாரிலிருப்பதாகத் தெரிவித்தாரே!

பேரரசரும், தேவியாரும் எப்படியும் அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வது என்று முடிவெடுத்துக் கொண்டிருந்தார்கள். பயணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும்கூட முற்றுப் பெற்றுவிட்டிருந்தன. என்றாலும், எல்லா நேரத்திலும், எல்லாருக்குமா எல்லாம் சித்திக்கப் பெற்று விடுகின்றன?

ஏமாற்றம் என்பதும் தடங்கல் என்பதும், இனம், மதம், மொழி, உயர்வு, தாழ்வு முதலான அனைத்தையும் கடந்ததாக நிகழும் சிறப்புக்குரிய ஒன்றாயிற்றே! அது எள்ளாளரையும் தழுவிக்கொண்டதிலே ஒன்றும் வியப்பில்லைதான், நமக்கு! ஆனால், எள்ளாளருக்கு?

மாலை மங்கிக் கொண்டிருந்தாலும், மறுநாள் முழு நிலா நாள் ஆகையால், அந்த மாலையே முழுமை பெற்றதாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. இன்பம் இழைந்த மனோகரமான தென்னாட்டுத் தென்றல் வேறு இராக ஆலாபனை செய்து, காலத்தை கவினுறச் செய்து களிப்பூட்டிக் கொண்டிருந்தது.

அரச உடைகளைக் களைந்து, சாதாரண சிவப் பிழம்பாக ஆடைகளை மாற்றிக்கொண்டு, மன்னரும், மன்னியும் பயணத்துக்குத் தயாராகி விட்டார்கள். தூரப் பயணத்துக்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளுடன், அரண்மனை முகப்பில் தேரும் தயாராக இருந்தது.

தளபதி தியாகராயரிடமும், அமைச்சர் முத்து முடியாரிடமும் பேசிக்கொண்டே இருவரும் சில அடி தூரம்கூட நடந்து வந்து விட்டார்கள், மனத்தில் மிகுந்த களிப்போடு!

நாட்டில் நிலவிக் கொண்டிருக்கும் அந்தப் போர்ச் சூழலில், மன்னரும், மன்னியும் மனஅமைதியோடு மனந் திறந்து பேசி, மகிழ்வுப் புன்னகையுடன் கலகலப்பாக இருந்து எத்தனையோ மாதங்கள் மடிந்து போய்விட்டன!

நாட்டில் போர் மேகம் குமுறிக்கொண்டிருக்கிறது என்கிற எந்த அறிகுறியுமே காணப்படாத அளவுக்கு அந்த அரண்மனையே அப்போது கோலாகலத்தில் மூழ்கிப் போயிருந்தது. மன்னர் வெளியூருக்குப் போகிறார் என்பதற்காக அல்ல—அரசரும் அரசியாரும் சிரித்துப் பேசி கலகலப்பாக இருக்கிறார்கள் என்பதறிந்து!

காலதேவனைவிட கொடிய ஒரு மாபாவி இருக்க முடியாது என்கிறார்கள். எந்த ஒருவரையுமே வெகு நேரம் சிரிக்கவிடமாட்டானாம்! அதுபோலவே, நீண்ட காலம் அழுதுகொண்டிருக்கவும் அனுமதிக்கமாட்டானாம்! அழுகையையும், சிரிப்பையும் மாறிமாறித் தந்து விளையாடுவது அவன் பொழுதுபோக்கு என்று எத்தனை எளிதாகச் சொல்லி வைத்திருக்கிறார்கள்!

அனுராதபுரம் அரண்மனை, அப்படி மகிழ்ச்சியில் திளைக்கக்கூடாது என்று காலதேவன் கூறிவிட்டானோ என்னவோ!

“விஜிதபுரம் கோட்டையைப் பலப்படுத்தும்படி ஓலை அனுப்புங்கள். அகழிகளை இன்னும் அதிகமாக ஆழப்படுத்தக் கூறுங்கள். கண்டி மலைப்பகுதிகளில் உள்ள ஏரிகளில் முதலைகள் நூற்றுக்கணக்கில் இருக்கின்றன. தகுந்த ஆட்களையும், சாதனங்களையும் அனுப்பி பிடித்துவரச் செய்து, விஜிதபுரக்கோட்டை அகழிகளிலே விடச் சொல்லுங்கள்! வேட்டரையரிடமிருந்து ஓலை வந்தால், முக்கியமான செய்தி ஏதேனும் காணப்பட்டால், அதனில் எனது ஆலோசனைகள் எதுவும் தேவைப்படும் என்று நீங்கள் நினைத்தால் உடனே, உலகாயதன் மூலம் அந்த ஓலையை எனக்கு அனுப்புங்கள். இரத்தினாவைப் பற்றிய



செய்திகளைக் கூர்ந்து கவனித்து வாருங்கள். அவளுக்கு ஆபத்து ஏதேனும் ஏற்படக்கூடும் என்று நிலைமை இருக்குமானல், திரும்பி வந்து விடும்படித் தகவல் அனுப்புங்கள்…''

…என்கிற ரீதியில் எல்லா விவரங்களையும் முத்து முடியாரிடம் எடுத்துக் கூறிக்கொண்டே மன்னர் நடந்துகொண்டிருந்தார், முகப்பை நோக்கி!

அரண்மனைக் கூடத்தின் மையப் பகுதியில், ஒரு பலகணியின் பக்கமாக அவர்கள் கடக்கும்போது தான், அந்தப் பயணத்துக்கான தடை, ஒரு ஓலை வடிவில் வந்து விழுந்தது.

கூறிய அம்பொன்றின் மையத்தில் ஓலை, கட்டப் பட்டு, பலகணியின் பக்கமிருந்து மின்னல் வேகத்தில் வந்து விழுந்தது மன்னரின் காலடியில். நல்ல வேளை! ஒரு நூலிழை அளவில், அது மன்னரது காலில் பதியாமல் போயிற்று!

கூடவே வந்து கொண்டிருந்த தளபதி தியாகராயர் இமை நொடி நேரத்துக்குள்ளாக, அந்தப் பகுதி முழுவதையும் ஆராயத் தொடங்கிவிட்டார். அவரது கழுகுக் கண்களில், அந்த அம்பை எய்துவிட்டு ஓடுபவன் தப்பிவிட முடியுமா? உச்சிச் சாளரங்கள் மூலம், மறைந்து மறைந்து ஒரு கரிய உருவம் வேகமாக வெளியேறிக்கொண்டிருந்ததனைக் கண்டார்; ஒரே தாவாகத் தாவி, அதனைத் தொடர்ந்து ஓடத் தொடங்கினர். அவரைத் தொடர்ந்து சில காவல் வீரர்களும் ஓடினர்.

அதற்குள், மன்னரின் காலடியில் விழுந்த அந்த ஓலையை, அமைச்சர் முத்துமுடியார் எடுத்து மன்னரிடம் நீட்டினர். பதட்டத்துடன், ஆனல் துணிவை இழந்து விடாதவராக மன்னர், ''நீங்களே படியுங்கள்!'' என்ருர். முத்துமுடியார் ஓலையைப் படித்தார்:

சோழப் பேரரசருக்கு,

நீங்கள் உயிருக்குப் பயப்படமாட்டீர்கள் என்பதை நாங்கள் அறிவோம். ஆனல், அந்த உயிர் போர்க்களத்திலே போக வேண்டும் என்று தான் நீங்கள் விரும்புவீர்கள் என்பதும் எங்களுக்குத் தெரியும். சோழப் பேரரசருக்கும், சிங்கள சிற்றரசுக்கும் விரைவில் போர் ஏற்பட்டே தீரும் என்றும், அந்தப் போரிலே உங்கள் முடிவு எப்படி இருக்கும் என்பதையும் நாங்கள் அறிந்திருக்கிருேம்.

நீங்களோ, அல்லது உங்கள் சார்பிலோ நடைபெறவிருக்கும் பௌத்த மகா சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளக் கூடாது.

நீங்கள் அங்கே வருகைதந்தால், எங்கள் முடிவு பயங்கரமானதாக இருக்கும் என்பதை எடுத்துக்காட்டவே, இந்த எச்சரிக்கையினை விடுக்கிருேம்.

உங்களது உயிர், போக்குவரத்துச் சாலையில் பிரிந்துவிட வேண்டும் என்பதை, நாங்கள் விரும்பவில்லை. எங்களது இந்த விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியது உங்களது பொறுப்பு.

இதையும் மீறி உங்கள் பயணம் நடைபெறுமானல், விளைவுகளுக்கு நாங்கள் பொறுப்பாளிகள் ஆகமாட்டோம்!

உங்களது பேராண்மையின்மீது நம்பிக்கை வைத்திருக்கிருேம்; ஏனென்ருல், நீங்கள் மனுச் சோழரது வாரிசு என்று கூறிக்கொண்டிருக்கிருர்கள் தமிழர்கள்!

இங்ஙனம்,

ஈழமண்ணுக்கு உரியோர்.

ஓலையைப் படித்து முடித்த முதலமைச்சர், மன்னரை முந்திக் கொண்டு, ''இந்த அற்பர்கள் ஆணவத்தைக் காட்டியிருக்கிருர்கள் என்றும் சொல்ல முடியவில்லை; அன்புரை விடுத்திருக்கிருர்கள் என்று நம்பவும் முடியவில்லை'' என்ருர், மன்னரைப் பார்த்து. தொடர்ந்து ''நீங்கள் பயணத்தை மேற்கொள்ளத்தான் வேண்டும் அரசே!'' என்ருர். தியாகவல்லி தேவியும், கவலைபடர்ந்தவராக மாறிவிட்டிருந்தாலும், ''இந்த குறும்புத்தனம் மிகுந்த ஓலைக்காக, நாம் பயணத்தை நிறுத்திவிடக் கூடாது பிரபு'' என்ருர்.

மன்னர் பதில் சொல்லவில்லை. சில விஞடிகள் வரையில் அமைதியாக இருந்துவிட்டு, புன்னகையை வெளிப்படையாகச் சிந்திவிட்டு, ''அமைச்சரே! நான் ஒரு கோழை என்று எண்ணிக்கொண்டு விட்டீர்கள்?'' என்று கூறிவிட்டு, அவருக்கே உரித்தான முறையில், இமைகளை மூடி, ஒரு விஞடி சிந்தித்துவிட்டு, மீண்டும் தேவியைப் பார்த்து ''என்ருலும் தேவி, நான் இந்தப் பயணத்தை ரத்துச் செய்கிறேன்! ஏனென்ருல், விண்ணப்பங்கள் நேரில் என்ருலும், ஓலை மூலம் என்ருலும் நிறைவேற்றித்தரும் கடமை எனக்கு இருக்கிறது. அச்சுறுத்தல் மிகுந்த விண்ணப்பமாக இருக்கலாம் அமைச்சரே! ஆனலும், அந்த விழைவு, எதன் பொருட்டு என்று எண்ணிப் பார்க்கிறேன்! அமைச்சரே! ஆமத்தியர் சொல்லிப்

போனாரே, நினைவிருக்கிறதா, நமது ஆட்சிக்கெதிரான கண்டனங்கள் வரக்கூடும் என்று! அதன் உண்மைக்கு ஒரு சான்று! நாமோ, நமது சார்பாளர்களோ சென்றால், கண்டனத்தின் வேகம் குறையக் கூடும் என்று அஞ்சுகிறார்கள் இந்தக் கோழைகள். எனவே, சில பௌத்த தேரர்களது வேலையாகத்தான் இது இருக்கவேண்டும்! வேண்டுகோள் விடுத்திருப்பவர்கள் தேரர்கள் என்பதால், நான் இந்தப் பயணத்தை ரத்துச் செய்கிறேன்! தேரர்கள் சூலம் ஏந்தி இருந்தாலும், அந்தச் சூலங்களால் என் உயிரைக் குடித்துவிட முடியும் என்பதற்காக அல்ல! புரிகிறதா தேவி! புரிகிறதா அமைச்சரே!" என்று கூறிவிட்டு, தளபதி ஓடிய திசையின்மீது ஒருமுறை பார்வையைச் செலுத்திவிட்டு, "அமைச்சரே! தேரர்களது விழைவை நிறைவேற்றும் கடமை எனக்குண்டா இல்லையா என்பதை நீங்களே சொல்லுங்கள்" என்றார்.

"மன்னரது விளக்கம் சிந்திக்கவேண்டிய ஒன்றுதான்; ஆனால் பயணத்தை ரத்துச் செய்வதும் விரும்பத் தக்கதல்ல என்றே நினைக்கிறேன்" என்றார் முத்துமுடியார்!

"நான் ஒரு கோழை; உயிருக்குப் பயந்துவிட்டேன் என்று நினைத்துவிட்டீர்கள் இல்லையா அமைச்சரே!" என்றார் எள்ளாளர். குறுக்கிட்ட தேவியார், "வேண்டாம் பிரபு! கோழை என்ற கொடுஞ்சொல் நம்மீது சார்வதானாலும், இந்தப்பயணம் வேண்டவே வேண்டாம்!" என்றார்.

மன்னர் புன்முறுவலுடன், முத்துமுடியாரைப் பார்த்து, "அம்பு வீசியவன் பிடிக்கப்பட்டானா என்ற விவரத்தை உடனே எனக்குத் தெரியப்படுத்துங்கள்!" என்று திரும்பிவிட்டார் அந்தப்புரத்துக்கு, தேவியாருடன்!

அருகே கிடந்த ஒரு இருக்கையில் அமர்ந்து கொண்டார் முதலமைச்சர். அரை நாழிகை நேரத்துக்குப் பிறகு, தளபதியார் திரும்பி வந்தார். தூர வரும்போதே, முடிவைப் புரிந்துகொண்ட அமைச்சர், தளபதியார் அருகே வந்ததும் "தப்பிவிட்டானா தளபதியாரே!" என்றார்.

தளபதியார் பற்களைக் கடித்துக்கொண்டு, தனது எரிச்சலை வெளிக்காட்டிக் கொண்டார். முதலமைச்சர் அவரிடம், "போனால் போகட்டும் தளபதியாரே! நாட்டிலே போர்ச் சூழல்கள் இருக்கின்றன! எதிரி நாட்டின் ஒற்றர்கள் நாடு பூராவும் மலிந்துபோயிருக்கின்றார்கள். இங்கே இந்த அரண்மனைக்குள்ளேயே கூட பலர் இருக்கக்கூடும்! ஒருவன் துணிவோடு வந்து, அம்பு வீசிவிட்டு, எளிதாகத் தப்பியோடும் அளவுக்கு நமது காவல், இருக்கிறது! வெட்கப்பட வேண்டும் நாம்! அரண்மனைக்குள் நுழைந்து, மன்னரைத் கொன்று போட்டுவிட்டுக்கூட ஒருவன் தப்பிவிட முடியும்போல் தெரிகிறது......... போய் வாருங்கள் தளபதியாரே!......" என்று கூறிவிட்டு எழுந்தார், மன்னரிடம் செல்ல.

தொங்கிய முகத்தோடு தளபதியார், அமைச்சர் சொன்னவைகளைக் குறித்து யோசித்துக் கொண்டே திரும்பினார், தமது இல்லத்துக்கு.

இது நடந்து நாலைந்து நாட்கள் மக்கி மடிந்து விட்டன.

வண்ணமிகு படைப்புகள்
வர்ணமய உலகம்
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்
பட்டுகள் பிரமாதம்
நெசவோ நெஞ்சையள்ளும்
குர்தாக்கள்
பெல் பாட்டம்கள்
லுங்கிகள்
சேலைகள்
உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள்...
கோ-ஆப்டெக்ஸ்
சகாயமான விலை...
ஆதாயமான உழைப்பு

தமிழ்நாடு
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிட்.

பாலசுந்தரம் பில்டிங்ஸ்
எழும்பூர் : சென்னை-8

ஒற்றுத் துறை மூலம், பௌத்த மகாசபைக் கூட்டத்தின் நடவடிக்கைகள் குறித்து சில தகவல்கள் கிடைத்தன மன்னருக்கு.

ஆமத்திய மகாதேரர், தத்ததேரர் என்ற இன்னொரு தேரரால் மிகவும் கடுமையாக விமர்சிக்கப்பட்டு விட்டார். எள்ளாளச் சோழரிடம் கையூடு பெற்றுக் கொண்டிருப்பதனாலேயே அவர், அனுராதபுரத்துக்குச் சாதகமாக, போர் பற்றிய எதிரான கருத்துக்களைத் தூவிக் கொண்டிருக்கிறார். சிங்க எல்லத் திவானது, கால முழுவதும் ஒரு அடிமை நாடாக—தமிழர்களது வேட்டைக் காடாக இருக்க வேண்டும் என்ற திட்டத்தை வகுத்துக்கொண்டு செயல்படுகிறார் மகாசபைத் தலைவர். இல்லையானால், மன்னரை இழந்து, ஒரு குழப்ப நிலையிலிருந்து கொண்டிருக்கும் ரோகணாவுக்கு ஆதரவு காட்ட வேண்டிய மகாதேரர், அனுராதபுரத்துக்குச் சாதகமாக போர் கூடாது; போர் வெறி ஆகாது என்று முழக்கமிடமாட்டார். பௌத்தம், குறுகிய மனப்பான்மை கொண்டவர்கள் குடியிருக்கும் கூடாரமாகிவிட்டது என்று கூப்பாடு போட்டிருக்கமாட்டார். பௌத்தம் என்ற போர்வைக்குள் சைவம் என்ற மிருகம் ஒன்றை நுழைத்து, ஆடச் செய்ய முயல்கிறார். ஈழத்தின் இப்போதைய தேவை, பௌத்தம் தூய்மைப்படுத்தப்படவேண்டும் என்பதுதான் என்பதைக் காட்டிலும் ஈழம், ஈழத்தவருக்கே சொந்தமாக இருக்க வேண்டும் என்பதே முதன்மையான கடமை; முக்கியவான காரியம், ஈழத்தை முதலில் ஒரு முழுமையான சுதந்திர நாடாக்கிக்கொண்டு, அப்புறம் தேவையானால், ஆமத்தியர் கூறுகிறபடி, தூய்மைப்படுத்துவது என்பதைப்பற்றிச் சிந்திக்கலாம். இன்றைய நிலையில், பௌத்தர்களாகிய அனைவரது முதற்கடமை, ரோகணாவுக்குத் தமது ஆதரவை வெளிப்படையாகக் காட்டவேண்டும். இயன்றவரையில் போர் வீரர்களையும், போர்க் கருவிகளையும் திரட்டித்தர வேண்டும்......அந்தக் காரியத்தைத்தான் இந்த மகாசபை, தனது தலையாய கடமையாக எடுத்துக்கொள்ள வேண்டும்......................
—என்ற ரீதியில் பேசி இருக்கிறார்.

சுதந்திரப் போராட்டம் என்ற போர்வைக்குள்ளே புகுத்தப்பட்ட போர் வெறி, மதவெறி சரியானபடி கொலை வெறியைத் தூண்டிவிட்டுவிட்ட போது, அதனை அடக்கி அன்பு வெறியைக்கூட அல்ல, அன்பின் வழியைக்கூட காட்ட இயலாமற் போய்விட்டது ஆமத்திய மகாதேரருக்கு.

நிலைமை, தலைமையை மிஞ்சிப் போய்விட்டது. தலைமை, தலைகுனிந்து கூட்டத்தைவிட்டு வெளியேறுவதைத் தவிர, மாற்று வழி இல்லை.

மொத்தத்தில், மகாசபைக் கூட்டம் குழப்பத்திலேயே கூடிக் கலைந்துவிட்டது.

—என்ற செய்தியையறிந்து மன்னரும் சோழ தேவியும் கவலையடைந்து விட்டார்கள். போர் தடுக்கப்பட முடியாததாகிவிட்டது என்பதுகூட ஒரு அரசியல் விவகாரம் என்கிற வகையில் அறைகூவலை ஏற்றுக்கொண்டுவிடலாம். ஆனால் மதவெறியின் பேரால், இனவெறியின் பேரால் கொலை வெறிக்கு மடை திறந்துவிடும் கொடுமைக்குக் கலங்காமலிருக்க முடியுமா? இதுபற்றிப் பல கோணத்திலும் பேசிப் பேசிக் களைத்துப்போய் விட்டனர் இருவரும்.

உச்சிப் பொழுதாகிவிட்டது. ஆமத்திய மகா

சுவைத்ததைச் சொல்கிறோம்

நவம்பர் 21-இல் வெளியாகி இருக்கும் ‹கரம் நீட்டுகிறோம்' என்ற தலையங்கத்தைப் படித்த பின், ‹காஞ்சி' இதழுக்குக் கழகத் தோழர்களது ஆதரவு எப்படி இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டேன்; நிலைமைக்கு வருந்துகிறேன். ஆண்டு சந்தாவையும் இன்று அனுப்பி இருக்கிறேன்,

புலவர். செந்தில், கம்மவார்பாளையம்.

21-11-71 இதழ் தலையங்கம், எங்களது கவலையை அதிகரிக்கச் செய்துவிட்டது. நாங்கள் அறிஞர் அண்ணாவை, எந்தக் காலத்திலும் மறந்துவிடமாட்டோம்.

நா. கருணாநிதி, காரைக்கால்.

அறிஞர் அண்ணாவை மறந்துவிடக்கூட முடியுமா?

து. பழநி, மதுரை-3.

விலை உயர்வைத் தெரிவிக்க அப்படியொரு தலையங்கம் தேவைதானா? நன்றி மறந்தவர்களா நாங்கள்?

துரை, கோவிந்தசாமி, சேலம் டவுன்.

‹தியாகபூமி' என்ற ஏடு ஆர். எஸ். எஸ்.காரர்களால் நடத்தப்படுவது என்பதை எண்ணிக்கொண்டால், நாம் ஆத்திரப்படத் தேவையில்லை.

இரா. நமச்சிவாயம், மாமல்லபுரம்.

பொடியனின் முதல் கட்டுரையே, அவர் பொடியன் அல்ல என்று எடுத்துக்காட்டுகிறது. இந்த நாட்டு முஸ்லிம்களைக் கொன்று குவிக்க வேண்டுமென்ற கோட்பாடு, இந்துமதத்துக்குரியதென்றால், அந்த மதம்பற்றிய மறு பரிசீலனை கட்டாயம் தேவைதான். 21—11—71 கட்டுரை சிறப்பானதொன்று,

பொன். சொக்கலிங்கம், சீர்காழி.

ஆலயப் பாதுகாப்பா? ஆரியப் பாதுகாப்பா? என்று துணிவான தலைப்பிட்டு, பகவத் கீதை சுலோகங்களின் எடுத்துக்காட்டுக்களுடன், பக்தர்களது பொய் மாலங்களைச் சிறப்பாக ஆராய்ந்திருக்கிறார் புலவர் அண்ணாமலை. பாராட்டுக்களைத் தெரிவியுங்கள்.

ஆர். எஸ். சம்பந்தம், கோவை-2.

28—11—71 இதழில் வெளிவந்துள்ள நேக்கு ஒண்ணும் புரியலே என்ற கதையைப் படித்தேன். ஆமாம், நேக்கு ஒண்ணும் புரியலே. அதேபோல் பொடியன் எழுதியுள்ள ‹கத்தியை எடுத்தவன்' கட்டுரையைப் படித்தபோதும் ‹கள்ளைக் குடித்தவன்'போல் தடுமாறிவிட்டேன்! ஏன் அப்படி? இதழில் இப்படியா கவனம் செலுத்துவது?

எம். மாணிக்கம், பாண்டிச்சேரி-2.

‹பிரச்னைகள் தீரவேண்டும்' என்ற சென்ற இதழின் தலையங்கம், வெறும் மழுப்பல் என்பதை நீங்கள் ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டும் என்ன, மழுப்பல்தானே?

எம். முத்துகருப்பன், காரைக்குடி.

இரத்தினாவைக் கொண்டுபோய், நந்திமித்திரனிடம் ஒப்படைக்கலாமா? சோழமாதேவியைத்தான் சொல்கிறோம்.

எஸ். எஸ். குப்புசாமி, விருதாசலம்.

இருண்ட இதயம்

(கீ. க. இராசேந்திரன், பி.எஸ்.ஸி.)

அந்தியில் மலரும் அல்லி மலர்போல்
வெள்ளை இதயம் விரிந்த வானம்
வானந் தேடி வந்தது நிலவு
நிலவு வந்து நிறையொளி தந்தது
கறையொன் றில்லாக் கன்னி நிலவு
நிறையொளி தந்ததும் நெடுவான் ஒளிர்ந்தது
பௌர்ணமி தான்தினம் பரவசம் தானெனக்
கருதின வான்—நிலா கவிழ்ந்ததே எண்ணம்
பழம் பஞ்சாங்கக் கிழ நெஞ்சங்கள்
சாதி பணபலம் சம்பிரதாயம்
பொறுப்ப துண்டோ? குறுக்கில் பாய்ந்தன.
பழகிய நிலவு நழுவிப் போனது
இருண்டது வானம்; இனிஎந் நாளும்
அமாவாசையே; அமைதி யின்றி
தடதட வென்றே இடிஇடித்து
அதிர்ந்தது வானம்; அமைதி எங்கே?
கருமுகில் திரண்டது; பெருமழை பொழிந்தது
கன்னத் தடத்தில் கண்ணீர்த் துளிகள்
ஊர்வலம் வந்து உணர்த்தும் வலியே!

தேரர் அவமானப்படுத்தப்பட்டு விட்டார் என்ற செய்தியாலேயே அதிகம் கிலேசமடைந்திருந்த அவர்களை, மேலும் அதிர்ச்சிக்கு ஆளாக்கிவிட்டது ரோகணுவிலிருந்து கிடைத்த செய்தி.

வலது கையில் பலமான காயத்துடன், உயிரிழந்த வேட்டரையனின் சடலத்தைக் கொண்டுவந்து சேர்த்தனர் மேனிவிடங்கனும், மற்றொரு வீரனும்.

துண்டித்துத் தொங்கிப் போயிருந்த அந்த முண்டத்தைக் கண்டதும், அண்டமே ஆடிக் குலுங்கியதுபோலிருந்தது மன்னருக்கும், தியாகவல்லித் தேவியாருக்கும்!

மன்னர் அதுபற்றிய விவரத்தைக் கேட்குமுன், சோழதேவி "இரத்தினு என்ன ஆனுள்?" என்று கேட்டார்.

இரத்தினுவைப்பற்றி என்ன சொல்வது? மேனிவிடங்கன் தயக்கம் காட்டினுன். தயக்கத்துடன், வேட்டரையனுல் தயாரிக்கப்பட்டிருந்த ஓலையை நீட்டினுன் மன்னர் முன். அதை கை நீட்டிப் பெற்றுக் கொண்டே, மன்னரும், "இரத்தினு எங்கே? முதலில் அதைச் சொல்!" என்றுர்.

வங்கத்துச் செய்திகள்

ஜம்மு, நவ. 30—மேற்கெல்லையில், ரஜௌரி பகுதியில் இரண்டு பாகிஸ்தான் விமானங்களும், கத்துவார் பகுதியில் ஒரு விமானமும், இந்தியப் பகுதிக்குள் ஊடுருவியது. இந்தியப் படை, அவற்றை விரட்டியடித்தது.

1965-இல், இந்தியாவிடம் பாகிஸ்தான் தோற்ற பிறகு, சியால்காட் பகுதியில் பாகிஸ்தான் எழுப்பி இருந்த எல்லைப் பாதுகாப்புச் சுவரை பாக். இராணுவம் இடித்துவிட்டது. இதன் மூலம் எல்லையில் போருக்கான வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொண்டிருக்கின்றன.

புதுடில்லி, நவ. 30—வங்க தேசப் பிரச்னையில் ஒரு உருப்படியான அரசியல் தீர்வு ஏற்பட வேண்டுமானுல், கிழக்கு வங்கத்திலிருந்து பாகிஸ்தான் துருப்புக்கள் உடனே வாபஸ் பெறப்பட வேண்டும் என்றும், அப்படிச் செய்தால்தான், பாகிஸ்தானுக்கு சமாதான உணர்வு இருக்கிறது என்பதை மெய்ப்பிக்க முடியும் என்றும் இந்தியப் பிரதமர் கருத்தறிவித்திருக்கிறுர்.

புதுடில்லி, நவ. 30—எல்லைப் பகுதியிலுள்ள நமது துருப்புக்களை வாபஸ் பெற முடியாது என்றும், ஏனென்றுல், இந்தியா வெகுதூரத்தைக் கடக்க வேண்டியிருக்கும் என்றும், அவ்வாறு வாபஸ் பெறுவது விரும்பத்தக்கதாக இல்லை என்று கடந்தகால அனுபவங்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன என்றும், இந்தியப் பிரதமர், அமெரிக்காவின் படை வாபஸ் கோரிக்கைக்குப் பதில் அளித்திருக்கிறுர்.

ஐ. நா. நவ. 30 — இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் ஐ. நா. பார்வையாளர்களை வைக்க வேண்டும் என்ற பாக். கோரிக்கையை அமெரிக்கா ஆதரிக்கிறது என்று ஐ. நா. - விலுள்ள அரசியல் பார்வையாளர்கள் நம்புகிறுர்களாம்! ஆனுல் இந்த யோசனையை இந்தியா தீவிரமாக எதிர்த்திருக்கிறது. இதே வேளையில், இதனை ஆதரிக்கும் போக்கில் ஊதாண்ட் இருக்கிறுர் எனவும், அவருக்கு அது முடிந்த ஒன்று என்றும், ஐ. நா. வட்டாரத்தினர் ஐயுறுகிறுர்களாம். ஏனென்றுல், பாதுகாப்புக் குழுவின் அனுமதி பெருமல் அவ்வாறு ஏற்க அவருக்கு முடியாது என்றும் கருத்தறிவிக்கிறுர்கள். இதே நேரத்தில் இந்தியா - பாகிஸ்தானுக்கிடையே நிலைமை மோசமாகி விடாமலிருக்கும்படியும், அந்த நிலைமைகள் ஒரு போரில் கொண்டு வந்து விட்டு விடாமலிருக்கும்படி கண்காணித்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் பாதுகாப்புக் குழுவினர் விரும்புகிறுர்களாம்!

ஜம்மு. நவ. 30—காஷ்மீர் எல்லையில், அக்கனூர்ப் பகுதியில் பார்க்கவாலுக்கு எதிரேயுள்ள எல்லா கிராம மக்களும் வெளியேற்றப்பட்டு விட்டதாகக் கூறப்படுகிறது. இதன் மூலம் போர் முஸ்தீபுகள் தீவிரமடைந்து விட்டது என்றும், போர் நடைபெறுவது நிச்சயம் என்றும் நம்ப இடமுண்டாகி இருக்கிறது.

காபூல், நவ. 30—இந்தியா-பாக். எல்லையில் நெருக்கடியான—மோசமான நிலைமைகள் உருவாகி இருப்பதால் இருநாடுகளிலுமுள்ள தனது தூதர்களை ஆப்கனிஸ்தான் ஆலோசனை கலப்பதற்காக அழைத்திருக்கிறது.

ஹாங்காங் நவ. 30—ரஷ்ய நாட்டின் ஊக்கத்தினுலேயே இந்தியா, பாகிஸ்தானுக் கெதிரான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்று செஞ்சீனு குற்றஞ் சாட்டி இருக்கிறது.

ராவல்பிண்டி, நவ 30 — தற்போதைய நெருக்கடியில் தமது நாட்டின் ஆதரவு பாகிஸ்தானுக்குத்தான் என்று துருக்கி நாடு வெளிப்படையாக அறிவிப்புக் கொடுத்திருக்கிறது.

மே வங்கம், நவ. 30—நாட்டு நெருக்கடி காரணமாக உடனே ஒரு தேர்தல் நடத்தும் நிலையில் நாடு இல்லை எனவும், அதனுல் மே. வங்கத்தில் இப்போது தேர்தல் நடத்த இயலாது எனவும் கூறி மறுபடியும் ஆறு மாத காலத்துக்கு குடியரசுத் தலைவரின் ஆட்சியே நீடிக்கப்பட்டிருக்கிறது.

இலண்டன், நவ 30—வங்க தேசத்தை அங்கீகரிக்கவும், காமன்வெல்த்திலிருந்து பாகிஸ்தானை வெளியேற்றவும் வேண்டுமென்றும் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் கோரப்பட்டதை பிரதமர் எட்வர்டு ஹீத் நிராகரித்திருக்கிறுர்.

தரை மீன்!

[கூனல்யாழ் மீட்டிக் கொந்தளிக்கும் கடலோரம் கானல்வரிப்பாடல் பாடுகின்றபோது கோபமுற்றுப் பிரிந்து சென்ற கோவலனுக்கு—பிரிவைத் தாளாத மாதவியாள் வெப்பக் கண்ணீரை விழி இணையில் வளர்த்தவாறு வரைகின்ற எரிமுச்சு நீட்டோலை.]

ஆவிநிகர் அன்பருக்கு மாத வியாள்
அகம்கனிந்த வணக்கங்கள் பலபு ரிந்து
நோவுகின்ற இதயமொழி எழுதும் இந்த
நீட்டோலை என்னவென்றால்; நிமிர்ந்து நிற்கும்
கோவிலிலே இருந்தசிலை பெயர்தல் போன்று
கோபமுற்று எனைநீங்கள் பிரிந்து சென்றீர்
ஆவலினால் புனைந்தநெஞ்சை ஒடித்து வைத்து
ஆத்திரத்தில் வெகுதூரம் விலகிச் சென்றீர்

மணமூச்சு விடுகின்ற தாழைப் பூக்கள்
மண்டியுள்ள கடலோரம் "கானற் பாட்டை"
இணைத்தபடி யாழ்வளர்க்கும் இசையி னோடு
இனிமையிலே திளைத்திருந்த போது ஏனோ
குணம்மாறி மனம்மாறிக் கோபம் கொண்டு
கதறவைத்துப் பதறவைத்து எனைப்பி ரிந்தீர்
துணை இழந்த என்நிலையோ காற்றுப் பட்டுத்
துடிக்கின்ற அகல்விளக்காய் ஆன தய்யா!

மனம் மாற்றும் ஊழ்வினையால் என்றன் அன்மை
மறந்துவிட்டு மறைத்துவிட்டுப் பிரிந்து சென்றீர்
நனைத்தபடி கண்ணீரால் என்கன் னத்தை
நிதம்நானோ விம்முகின்றேன், வாடு கின்றேன்
தினந்தோறும் வலம் நடத்தும் கதிரின் வெப்பம்
தொடுகின்ற தரைமீது, நீரை விட்டு,
இனிவாழ்வு இல்லையென்று துடிக்கும் மீன்போல்
ஏலாத உம்பிரிவால் வருந்து கின்றேன்

நான்பிறந்த இனம்வேசி இனம்தான், வேலி
நாட்டாமல் விளைந்திருக்கும் நிலம்தான், நீல
வான்பரப்புப் பொதுவாகத் தெரிவ தைப்போல்
வாழுகின்ற பொதுஉடமைக் கூட்டம் நாங்கள்
தானமிட்டுச் செவ்வுடலை ஆண்க ளுக்குத்
தழுவுகின்ற என்குலத்தில் நெறியே இல்லை
கூனரிவாள் தங்குதற்கு உறையா உண்டு?
கட்டாயம் இதைப்போன்றே என்னைப் பற்றி

நினைவுகளை நெஞ்சத்தில் வளர்த்தி ருப்பீர்
நிறைஅன்பைத் தாழ்வாக மதித்தி ருப்பீர்
புனலோடும் நீளாற்றின் பரப்பின் மீது
நீர்பாசி படிந்திருக்கும் உண்மை, ஆனால்
பனித்தண்ணீர் குளிப்பாட்டிக் கறையின் ஓரம்
படுத்திருக்கும் கூழாங்கல் புனித மாக
மினுக்குவதைப் பார்த்திருப்பீர், அதனைப் போன்றே
பாவையென்றன் அறவாழ்வும் அறியீ ரோநீர்?

பொன்னுக்கும் பொருளுக்கும் இச்சை யுற்றுப்
பழகுகின்ற பெண்ணாக நான்இ ருந்தால்
இன்றுவரை எத்தனையோ மலர்மஞ் சத்தை
இரவினிலே அலங்கரித்து வாழ்ந்தி ருப்பேன்
நன்றல்ல அவ்வாழ்க்கை எனநி னைத்து
நல்லபடி யாய்வாழ விருப்ப முற்றே
ஒன்றிநின்றேன் உம்மோடு காதல் கொண்டு
உயிர்மூச்சை உங்களுக்கே அர்ப்ப ணித்து

தளைவேரு இழையாமல் தூய்மை யோடு
துலங்குகின்ற தனிவெண்பாக் கவிதை யாகத்
துளியேனும் கறையின்றித் திகழ்ந்த வாறு
ததும்புகின்ற இறையுணர்வே எனது காதல்;
விளைகின்ற பயிர்வயலில் நெருஞ்சி வித்தை
விதைக்கின்ற உழவன்போல் என்றன் நெஞ்சில்
கிளைவிட்டுத் துயர்நினைவு வளரச் செய்து
கரைதொட்ட அலையாக விலகிச் சென்றீர்

வரிப்பாடல் யாழோடு இசைக்கும் போது
விபரீதம் ஏதேனும் கொள்ளு மாறு
தெரியாமல் நான்பாடி இருந்தால், அந்தத்
தவறுக்கு உமதுதிரு தாள்வ ணங்கி
உருகுகின்ற உள்ளத்தால் இறைஞ்சு கின்றேன்
உதாசீனம் செய்யாமல் எனைமன் னிப்பீர்
பிரிவென்னும் அனற்கொள்ளி எடுத்து வீசி
பேதைமகள் என்மனத்தை எரிக்கா தீர்கள்!

நீலமிட்ட வானரங்கில் நடிக்கும் வட்ட
நிலாக்கோளம் மறைந்துவிட்டால் பினனர் அங்கு
கோலமிட்ட ஒளிப்புனைவு களைந்து கங்குல்
குமுறுகின்ற இருளாட்சி தொடர்தல் போலச்
சேலைஇட்ட என்மேனி தன்னைச் சுற்றிச்
சிறைஇட்ட கரம்நெகிழ்த்திப் பிரிந்த தால்நீர்,
வேலைஇட்ட விழிஇணையில் கண்ணீர் தண்ணீர்
வருத்தத்தால் வடியாமல் நிறைந்த தன்ப!

வரிவிழியின் பனிப்பார்வை, இதழ்வ டிக்கும்
வாக்கியத்தின் மொழிஇனிமை, சாயம் தோய்ந்து
எரிவிளக்குத் தழல்நிறத்தைக் காட்டும் பாத
இசைச் சிலம்பு மிழற்றுகின்ற ஒலியும், ஆடித்
தெரிவிக்கும் எனது அங்க நடிப்பும், பாட்டுத்
ததும்பவைக்கும் யாழ்கோடும் என்னை நீங்கள்
பிரிந்துசென்ற காரணத்தால், பயனே இன்றிப்
போய்விட்ட கொடுமையினை உணர்வீ ரோ, நீர்?

பனிநெருப்புக் கதிர்நீட்டும் நிலவு, வண்டு
பயிலுகின்ற இசைப்பாட்டு, "பேதைப் பூவை"
முனைமலர்த்திப் பருவமுறச் செய்யும் தென்றல்,
மயல்கீதம் இயற்றுகின்ற குயிலின் வார்த்தை,
மனப்பேழை தனில்நிரப்பும் தாபம் தன்னை
முற்றுமல் தணிப்பதற்கு மார்க்க மின்றித்
தனக்குவையைப் பறிகொடுத்த வறிஞன் போலத்
தவிக்கின்றேன் துடிக்கின்றேன் உமைஇ ழந்து!

பொன்விளக்கு ஒளிமூச்சைத் துயில விட்டுப்
படருகின்ற இருள்திரையில்; மஞ்சம் மீது
மின்விளக்கு இடைநொசிய எனைனு ணைத்து
மதுமுத்த இதழ்ப்பதிப்பு நடத்தி என்றன்
கன்னத்தில் இட்டஎச்சில் கோலம் இன்னும்
காயவில்லை, மனஆசை தீர வில்லை
சொன்னமொழி செவிஇரண்டில் அடங்கும் முன்னே
சோகத்தால் வாடவைத்துப் பிரிந்த தேனோ?

ஆடுகின்ற நேரத்தில் சதங்கைக் கொத்து
அடிப்பாதம் தனில்இணைந்து முரல வேண்டும்
பாடுகின்ற போதினிலே வாத்தி யங்கள்
பாட்டோடு கலந்தபடி ஒலிக்க வேண்டும்
வாடுகின்ற எனதுமனத் துயரம் தூர்ந்து
வாழ்வதற்கு மீண்டும்நீர் என்ற னோடு
கூடுகின்ற பெரும்பேறே வாய்க்க வேண்டும்
குளத்தண்ணீர் போல்இதயம் குளிர வேண்டும்?

எரிமூச்சு வளர்த்தபடி எழுது கின்ற
இம்மடலைத் தயவோடு ஏற்றுக் கொண்டு
வரிக்கண்ணீர் நெகிழவிடும் கண்ணி ரண்டும்
வரவேற்று மகிழ்வதற்குத் திரும்பி வாரீர்!
புரியாமல் பிழைஏதும் செய்தி ருந்தால்
பேதைஎன்னை மன்னித்துத் தழுவ வாரீர்
வருகின்ற சம்மதத்தைச் சொல்லி விட்டால்
வாசலில்இம் மாதவியாள் காத்து நிற்பாள்!

— துறவி.

தமிழ்ப் போற்றி!

தமிழ் வழிபாடு தோன்றியகாலம் முதலாக கடவுளைப் போற்றும் பழக்கம் உண்மையால், அதனை மறுக்கவோ, மறைக்கவோ, மறக்கவோ எவர்க்கும் எண்ணம் உண்டாகாது.

தமிழில் வடமொழி கலப்பதற்கு முற்பட்ட காலத்திலே தோன்றிய தமிழ்ப் போற்றியிலும் வடமொழி யருச்சனை எவ்வாற்றானும் மேம்பட்டதாகாது.

தமிழ்ப் போற்றியின் தொன்மையை உணர ஒரு சான்றே போதும். மலையாள மொழி தமிழின் வழிமொழிகளுள் ஒன்று என்பது யாவரும் இசைந்ததே.

"கன்னடமும் களிதெலுங்கும்
கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதிரத் துதித்தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்
தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே"

எனப் பிள்ளை அவர்கள் பாடியதாலும் அது பலர்க்கும் தெரியும். அம்மலையாளத்திலே 'போற்றி' 'போற்றிகள்' 'போற்றிமார்' 'போத்திமார்' 'போத்திகள்' 'போத்தி' என்னும் வழக்கு இன்றும் உண்டு. அதனால், தமிழ்ப் போற்றியின் தொன்மை நன்கு புலப்படும்.

சேரமான் பெருமான் (கழற்றறிவார்) நாயனார் அந்நாட்டரசர். அவர் அருளிய திருக்கயிலாய ஞானவுலாவிலே (50—56)......... மேலையிமையோர் பெருமானே போற்றி, யெழில்சேர் உமையாள் மணவாள போற்றி, எமை ஆளும் தீயாடி போற்றி, சிவனே அடி போற்றி, ஈசனே எந்தாய் இறை போற்றி, தூயசீர்ச் சங்கரனே போற்றி, சடாமகுடத்தாய் போற்றி, பொங்கரவா பொன்னங் கழல் போற்றி, அங்கொருநாள் ஆய விழுப்போர் அருச்சுனன் ஆற்றற்குப் பாசுபதம் ஈந்த பதம் போற்றி, தூய மலைமேலாய் போற்றி, மயானத்தாய் வானோர் தலைமேலாய் போற்றி, தாள் போற்றி, நிலைபோற்றி போற்றி எனப் பூமாரி பெய்து புலன்கலங்க நாற்றிசையும் எங்கும் நலம் பெருக".

என்று போற்றிய வாய்மையைக் காணலாம், இதிலே போற்றலும் பூமாரி சொரிதலும், அதன் பயனாகப் புலன் கலங்கலும், நாற்றிசையும் எங்கும் நலம் பெருகலும் உணர்த்தப்பட்டன. படவே, வடமொழியர்ச்சனைதான் சாந்நித்தியம் தரும் என்னும் பிற கொள்கையை இசைவார் யார்? வைணவத்திலே 'நித்யாநு சந்தாநம்' சைவத்திலே 'சிவபூசைத் திரட்டு' இரண்டு தமிழ் வழிபாட்டுக்குரியன. எவ்வெம்மொழியினரும் அவ்வம்மொழியில் வழிபடும் இயல்பை மறுப்பவர் அறிஞர் ஆவரோ?

டாக்டர் முத்து நமசிவாயம்

வடமொழியே வழிபாட்டுக்குரியது எனின், உலகில் வெவ்வேறு மொழியில் நிகழும் வழிபாடெல்லாம் பயன் கொடாதன என்று தானே கருதப்படும். படின் அது பொருந்துமோ? வடமொழியருச்சனை தமிழகத்திற் புகுந்த காலத்தின் முன்னும் பின்னும் தமிழ்ப் போற்றி நிகழ்ச்சிக்குப் பயன் இல்லையெனின், இவ்வளவிற்குத் திருக்கோயில்கள் வளர்ந்திருக்குமோ? தமிழ் மக்கள் பயனில்லாதன செய்யும் முயற்சியில் ஈடுபாடு அடைவார்களோ? கடவுளைச் சிறப்பாகக் கொண்டிருப்பது தென்னுடே, எந்நாடும் பொதுவில் கொள்ளத்தக்கனவே யாகும். அருளாளர்

'தென்னாடுடைய சிவனே போற்றி

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்றார்.

இதனால், சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவனாவான், ஆகியும், தென்னாடுதான் அவனைத் தனக்குரியனாக உடையது என்பது விளங்குகின்றது. விளங்கவே, தமிழ்ப் போற்றியால் பயன் இல்லை, வடமொழி யருச்சனையால்தான் பயன் சாந்நித்தியம் எல்லாம் உண்டு என்பது தகுமோ? வேண்டுநர் வேண்டியாங்கு அவரவர் மொழியில் வழிபட்டுப் பயன் அடையும் மெய்யைப் பொய் என எவரும் துனிய மாட்டார்.

வடமொழியருச்சனையில் ஓதப்படுவன எல்லாம் அருள் பெற்ற சான்றோர் ஆக்கியன அல்ல. வேதாகம மந்திரங்களையன்றி ஏனையவற்றை அப்படிக் கொள்ளல் பெருங்குற்றமே.

சிறு தெய்வங்களுக்கெல்லாம் 108, 1008 மந்திரங்கள் பிற்காலத்தார் எழுதினர். அவற்றைச் சொல்லிக் கோயிலில் அருச்சனை செய்வது கொடும்பாவமே விளைக்கும். பல யாண்டுகளுக்கு முன் ஒரு பிள்ளையார் கோயிலில் அருச்சகர் வடமொழியருச்சனை செய்தார். அவருக்கு ஒரு மொழியும் தெரியாது. அருச்சகர் குடும்பத்தில் பிறந்து விட்டார். அப்பிறப்பே அன்றி வேறு ஒரு சிறப்புமில்லை. அவர் 'சூர்ப்ப கர்ணாய நம!' 'லம்போதராய நம!' 'உமாங்க மலஜாய நம!' என்பவை முதலியவற்றை ஒலிக்கும் முறையும் தெரியாமல் சொல்லி மலர் தூவினார். அப்பொழுது பக்கத்திலிருந்த புலவர் அவரைச் சில கேள்விகள் கேட்டார். அப்போது அருச்சகர் இஞ்சி தின்ற குரங்கானார். வழிபாடு முடிந்ததும் நாங்கள் எங்கள் இருப்பிடத்தை அடைந்து உணவு கொள்ளும் வரையில் சொற்பொழிவு செய்வதிலும் கேட்பதிலும் பொழுது போக்கினோம். நாம் பேசும்போது இடையில் ஒருவர் எழுந்து அருச்சகர் சொன்ன மந்திரங்களின் பொருள் என்ன என்று கேட்டார். கேட்டவர் நல்ல அறிவுடையவர். நாம் சொன்ன பொருளைக் கேட்டுத் தமது விவேகத்தையும் தமக்குண்டான ஆனந்தத்தை

மொழிக் கட்டுரை

யும் அவையோர் எல்லார்க்கும் பங்கு போட்டு விட்டார். உமா-உமாதேவி; அங்கம்-உறுப்பு; மலம்-அழுக்கு; ஜாய - பிறந்தவருக்கு, தாயாரது உறுப்பில் உள்ள அழுக்கிற் பிறந்த பிள்ளைக்கு என்பது 'உமாங்க மலஜாய' என்பதன் பொருள். லம்போதரன் (லம்பம்-உதரன்) தொங்கிய (பெரு) வயிற்றன். சூர்ப்பகர்ணன் (சூர்ப்பம்-முறம்; கர்ணன் - காதன்) முறக்காதன். இப்படி இழிந்துரைக்கும் பொருளுடையவை மந்திரங்களாகுமோ? அவற்றைச் சொல்லினால் தெய்வம் மகிழுமா? வரம் தருமா? சாந்நித்தியம் உண்டாகுமோ? அதனால் எல்லா நன்மையும் உண்டாவதெப்படி? அப்பொருள் கடவுள் வழிபாட்டுக்கு எவ்வாறு பொருந்தும்?

நாயன்மார்களும் ஆழ்வார்களும் கடவுள் திருமுன் பாடி வழிபட்ட திருப்பதிகங்களை அக்கடவுள் உகந்து அருள் செய்த உண்மையை இன்றும் அவற்றைப் பாடி அறியலாம். அவற்றைப் பாடுவதே அருச்சனை என்று கடவுள் உறுதியுறக் கூறியதாகச் சேக்கிழார் அருளியதால் நாம் அறிந்திருக்கின்றோம். 'அர்ச்சனை பாட்டேயாகும்' என்பது அது. அப்பாட்டும் தமிழ்ச் சொற்பாட்டே, அது கேட்டவரும் தூ மறைபாடும் வாயார். தூ மறை பாடும் வாய் தமிழ்ப்பாட்டைக் கேட்டது. அத்தமிழ் சாந்நித்தியத்தை உண்டாக்காது என்கின்றார் ஒருவர். அப்படி ஆனால், திவ்வியபிரபந்தம் பாடுவதால் சாந்நித்தியம் உண்டாகாது என்று தானே முடிவு செய்யக்கூடும்! 'பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசும் கொண்டல்' இதைப் பொறுக்கவே மாட்டார்.

சுந்தரமூர்த்தி நாயனார் தாம் அருளிய திருப்பாடல்களை 'ஓதுவார்தம் தலைமேற்பயில்வார்' என்று பாடியருளினார். அப்பரும், சம்பந்தரும் பாடியவற்றைப் பாடி வழிபட்டால் ஆண்டவன் பெரிதும் மகிழ்ந்து அருள் செய்வான் என்றும் அவர் அருளினார். தம் பாடல்களை ஓதுவாரைத் தொழுமின்கள் என்றும் பணித்தருளினார். இவற்றால் திருமுறைச் சிறப்பு விளங்கும். இவற்றோடு மற்றொன்றும் இங்குக் கருதத்தகும். நாயன்மார் திருவாயில் வந்தவையெல்லாம் ஆண்டவன் அருள்மொழிகளே ("எனதுரை தனதுரை") என்னும் உண்மையை அறிஞர் அனைவரும் உணர்வர். 'சிவப்பிரகாசம்' என்னும் அருணூலில் காப்புச் செய்யுளுரை விசேடத்தில் மதுரைச் சிவப்பிரகாசர் 'ஒழுகலரிது' 'மலையினர் பருப்பதம்' என்னும் இரு திருப்பதிகத்தைக் குறித்து "நூலே நல்வாழ்வுக்குத் அகத்துணையாக நின்று அறிவிப்பதாம்" என்று எழுதினார். இதனால் என்ன நாம் அறியக் கிடக்கின்றது? திருமுறைகளிலும் வழிபாட்டுக்கு வேறு யாதும் வேண்டுவதில்லை (சைவர்க்கு). வைணவர் முதலோர்க்கும் அவரவர் தெய்வத் தமிழ் நூல்களேஅமையும். வேற்று மொழி நூல் ஏன்?

திருக்கோயில் வழிபாட்டிற்குப் பிறர் துணையை வேண்டாமல், அறிவும் தூய்மையும் எவரும் தாமே மலர் தூவிப் போற்றி வழிபடும் நல்ல வழக்கம் பழையபடி ஏற்படுவது மிக நல்லது, விரிவஞ்சி இதனை முடிக்கின்றோம். தூய்மையும் அன்பும் உள்ளவர் எவரும் கோயிலில் வழிபாடு பண்ணலாம். பண்டைய வழக்கம் இதுவே.

தமிழ்ப் போற்றிக்கு இக்காலத்தில் தூயரல்லாதவர் எழுதித் தருவனவற்றை மேற்கொள்ளல் ஆகாது. திருமுறைகளிலும் திவ்வியப் பிரபந்தங்களிலும் பிற சமய நூல்களிலும் உள்ளவற்றை அவரவர் கோயிலில் ஆள்வதே அருள் விளைக்கும். இதைக் கடைப்பிடித்து ஒழுகுவது இன்றியமையாதது. தமிழ்ப் போற்றிக்கு மதுரைக் கோயிலில் திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா மிக்க சிறப்புள்ளது. பொதுவில் எல்லாக் கோயில்களிலும் ஆளக்கூடியன இவை;-

(1) அப்பர் திருத்தாண்டகங்களுள் போற்றி என்றுள்ள ஐந்து திருப்பதிகம்,

(2) திருவாசகத்தில் உள்ள போற்றிகள்,

(3) வ. சு. செ. தென்நெறியில் அமைந்துள்ள போற்றிகள், (சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு)

(4) பதினொன்றாந் திருமுறையில் உள்ளவை:-

(அ) திருக்கயிலாய ஞான வுலாக் கல்வி (50—56),

(ஆ) நற்கீரர் அருளிய போற்றித் திருக்கலி வெண்பா,

(இ) திருமுருகாற்றுப் படை (255—276, 277) போற்றி, முறையில் அமைத்துக் கொள்க.

(ஈ) கோயில் நான்மணி மாலை (பா. 40),

(உ) பெருந்தேவபாணி (போற்றிகளை யமைத்துக் கொள்க),

(ஊ) திருவெழு கூற்றிருக்கை (போற்றிகளை யமைத்துக்கொள்க),

(எ) திருவிடைமருதூர் மும்மணிக் கோவை (19, 1, 12) ஷெ,

(ஏ) திருவொற்றியூர் ஒருபா ஒருபது (10),

(5) போற்றிப் பஃறொடை,

(6) திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா.

பாராயணத்தால் அருச்சனை செய்த பாவனையிற் பயன் அடைய வேண்டினும் இவையே பொருந்துவனவாகும். அகத்தியர் தேவாரத் திரட்டிற் கண்டவற்றையும் பாராயணம் பண்ணலாம்.

பலநூற்றாண்டுக்கு முன்பிருந்தே தமிழிலே வழிபட்டு வருகின்ற உண்மையை நிறுவும் சான்றாக உள்ளவை, சிவபூசைத் திரட்டு, நித்யாநுசந்தானம் என்னும் இரு சமய நூலும் ஆகும். அவ்விரண்டும் இன்றும் ஆட்சியில் உண்டு. பலர் அவற்றைக் கொண்டே வழிபடுகின்றனர். வைணவப் பெண்டிர் பழக்கத்திலும் அவ் வழிபாடு உண்டு. 'நித்தியாநுசந்தானம்' என்பது திவ்விய பிரபந்த (தமிழ்) பாக்களால் ஆனது. அதுவும் இன்று பழக்கத்தில் இருக்கின்றது. தமிழர் தமிழில் வழிபடல் வேண்டும் என்பதற்குத் தொன்மைச்சான்று இவற்றிலும் வேறு வேண்டா.

தமிழர் இனியேனும் பொருளறியும் நலம் வளரும்வகை கோயிலில், வீட்டில், பிற அருளகங்களில் தமிழ்ப் போற்றி செய்து மொழி வளர்ச்சியையும், அருள் வளர்ச்சியையும் எய்துவர் என்று திருவருளை நாடுகின்றோம்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்ப் போற்றி!! *

நீங்கள்
காஞ்சி
இதழுக்குச்
சந்தா
அனுப்பிவிட்டீர்களா?

படை திரட்டும் பக்தர்களே!

வாதமென்ன வைத்தீர்கள் வம்பர்களே!

ஓ! என் கொடிய நண்பர்களே! 'ஆலயத்தை'ப் பாதுகாப்போம் என்று ஆர்ப்பரிக்கும் அன்பர்களே! கோபிக்க வேண்டாம், பக்த சிரோமணிகளே! உங்களிடம் நேரிடையாகவே பேச விரும்புகிறேன். "எங்களிடமா? நீயா? என்ன தகுதியிருக்கிறது உனக்கு?" என்று அலட்சியமாகப் பார்க்கிறீர்களா? பாருங்கள்......பாருங்கள்!! "ஐயோ! எம்பெருமானைப் போல எங்களுக்கு நெற்றிக் கண் இல்லையே, இந்த நீசனைச்சுட்டெரிக்க?" என்று நினைக்கின்றீர்களா? நினையுங்கள்......நினையுங்கள்!! ஆனால் ஒன்று, ஆலயப் பாதுகாப்பு என்பதும் "அவாள்" பாதுகாப்பே என்பது மறுக்க முடியாத உண்மை. இன்றில்லாவிட்டாலும், நாளை, நாளை மறுநாள், இல்லை......என்றாவது ஒருநாள் பக்தி மயக்கத்தில் பகைவர்களுக்குத் துணையாக இருக்கும் சில ஏமாந்த 'எங்கள்' ஆட்களை விழிப்படையச் செய்யாமல் ஓய்வெடுப்பதாக நாங்கள் இல்லை என்பதை மட்டும் மிகமிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆமாம்; ஆலயப் பாதுகாப்பு மாநாட்டு விளம்பரங்களில் 'தியாக பூமி' படியுங்கள் என்ற வேண்டுகோளும் இருக்கிறதே, அதற்கு என்ன பொருள்? பக்தர்களின் அதிகார பூர்வமான ஏடா அது? 'ராஷ்டிரீய சுயம் சேவா சங்' என்னும் அமைப்பின் ஆசை மகனே தியாக பூமி என்கிறார்களே அது உண்மையா? உண்மைதான் என்றால் பக்தர்கள் எல்லாருமே ஆர். எஸ்.எஸ். ஐச் சேர்ந்தவர்களா? போகட்டும்; போராட்டப் புலிகளே! மலரில் வந்துள்ள கருத்துக்கள் எல்லாமே உங்களுக்கு உடன்பாடானவைதாமே!! எனவேதான் உங்களிடம் நேரிடையாகவே கேட்க விரும்புகிறேன்; 'படை திரட்டும் பக்தர்களே! என்ன வாதங்களை வைத்துள்ளீர்கள் என்று!! தவறா? அதுசரி; சிந்தனையின் அடிப்படையான கேள்விக்கும் உங்களுக்கும் நீண்ட காலப் பகையாயிற்றே!! 'நம்பினவர்க்கு நடராசா நம்பாதவர்க்கு எமராசா என்பதுதான் உங்கள் வேதமாயிற்றே!!

ஆலயப் பாதுகாப்பு ஆண் சிங்கங்களே! உங்கள் கோரிக்கைகள் என்னென்ன என்று தெளிவாகப் புரிகிறது!! ஆனால்; அந்தக் கோரிக்கைகளை நிலைநாட்ட நீங்கள் வைத்த நீதி என்ன? அர்ச்சனை தமிழில் இருக்கக் கூடாது; பிரம்மாவின் முகத்தில் பிறந்தவர்களைத் தவிர, வேறு யாரும் அர்ச்சகர்களாக இருக்கக் கூடாது; ஆலயத்தின்

— பொடியன் —

சொத்தை, பூசை, புனஷ்காரத்துக்குத் தவிர, ஏழைகளுக்கும் எளியவர்களுக்கும் பயன்படும் வகையில் செலவழிக்கக் கூடாது; ஆலயத்தில் அரசாங்கத் தலையீடு அறவே இருக்கக் கூடாது. ஆலயத்தின் எல்லா வகையான அதிகாரங்களும் பக்தர்களின் குழுவிடம் ஒப்படைக்கப் படவேண்டும்; இவைகள் எல்லாமே உங்களின் கொள்கைகள்; இவைகளுக்காகப் போராடப் போகின்றீர்கள்? இல்லையா புலிக் குட்டிகளே!

போராட்டமிருக்கட்டும்; உங்களின் நியாயங்களை மக்கள் மன்றத்தில் வைக்கும் நினைவுண்டா? சாங்கோபசாங்கமாக வைப்போம் என்றால், அவற்றில் ஒன்றிரண்டையாவது போனால்போகட்டும் என்று தியாக பூமியில் தெளித்திருக்கக் கூடாதா? தேடித் தேடிக் களைத்தேனே தவிர கண்டேனில்லை; கடவுளையல்ல, கருத்தை உங்கள் 'பக்க, வாதத்தை', தத்தித் தவழும் மழலை போன்ற இளம் பிள்ளை வாதத்தை', உண்மையென்னும் குவியலில் ஒரு 'பிடி, வாதத்தை' நானும் தேடித் தேடிப் பார்த்தேன்; கிடைத்தது கடவுள்தான். [கடவுள்—கற்பனை].

நான் ஒரு பொடியன்; உங்களிடம் நியாய வாதத்தை எதிர்பார்த்தேனே!! எந்தக் காலத்தில் பக்தர்கள் நியாய வாதம் செய்திருக்கிறார்கள்? குட்டையில் வரால் மீன் பிடிக்கப் போனால், தவளை தானே... இல்லை...இல்லை தவளைக் குஞ்சுகள் தானே கிடைக்கும். தியாகபூமியில் கிடைத்த அந்தத் 'தலை பரட்டை'களை உங்களிடமே மேய விடுகிறேனே!! ஏன்? அருவெறுப்பாக இருக்கிறதா? இதை வைத்துத்தானே எரிமலையோடு விளையாடப் பார்க்கிறீர்கள்.

இதோ ஒரு தவளைக் குஞ்சு; எதற்கும் சற்று பயபக்தியோடு இருங்கள். ஏன்? பெரிய இடத்துத் தவளைக் குஞ்சு இது. சாதாரண பெரிய இடமா என்ன? ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்......; கொஞ்சம் பொறுங்கள், மூச்சு விட்டுக் கொள்ளுகிறேன். இப்போது சொல்லுங்கள், இது பெரிய இடந்தானே!! அந்தப் பெரிய இடத்துத் தவளைக் குஞ்சு இதுதான்...

"குருக்கள் அனுஷ்டானமில்லாதவர்களாக இருக்கிறார்களே, யார் உள்ளே போனால் என்ன என்று சொல்லுகிறார்கள். அதாவது பாக்கி இருக்கிற ஸ்வாமியையும் வெளியே அனுப்பிடுவோம் என்கிறார்கள். கோயிலில் இருக்கிற அனாசாரத்தை நிவர்த்தி செய்யவேண்டுமே யல்லாமல், புது அனாசாரத்தைப் புகுத்தக்கூடாது. ஒரு வீட்டில் திருடன் புகுந்து விடின் அதற்காகக் கதவைக்கழற்றி எப்போதும் திறந்து கிடக்கும்படி விடுவதுண்டா? சாமானிய அனு

சிறப்புக் கட்டுரை!

இக் கட்டுரைப்பகுதி தொடர்ந்து வரும். ஆரிய மாயையையும், புரட்டுக்களையும் காலச் சூழ்நிலையோடு புரட்டிக்காட்டும்; தேவாலயப் பாதுகாப்பு என்பதன் பித்தலாட்டங்களை அம்பலப்படுத்தும்.

<u>அடுத்த இதழில்:</u>

முடிந்தால் மறுத்துப் பார்!

பொடியன் விமர்சிக்கிறார்!

சாரங்களினால் சான்னித்தியம் குறைந்துவிட முடியாமல்......"

எதை எதிர்க்க, எதனுடன் மோத இந்தத் தவளைக்குஞ்சு அனுப்பப்பட்டிருக்கிறது தெரியுமா? "குறிப்பிட்ட ஒரு சாதிதான் அர்ச்சனை செய்யலாம் என்னும் குருட்டு நெறிக்கு வெடி வைத்து, தகுதியுள்ளவர் அனைவரும் அர்ச்சனை செய்யலாம்; செய்யவேண்டும்" என்னும் புரட்சி மலையோடு மோதத்தான் இந்தத் தலைபரட்டை.

"ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம்; நாமெல்லாரும் ஆண்டவன் முன்னிலையில் அனைவரும் ஒன்றே. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சாதி இரண்டொழிய வேறில்லை" என்றெல்லாம் வாய் மணக்கப் பேசுவதெல்லாம் உண்மையென்றால், இறைவனுக்கு அர்ச்சனை செய்யும் உரிமை பிறப்பால் உயர்ந்தோம் என்று பித்தலாட்டம் பேசும் நூற்றுக்கு மூன்றுகளாக இருக்கும் நூலோர்க்கு மட்டுந்தானா? பஞ்சமா பாதகங்களின் மொத்த உருவம் இறைவனைப் பூசிக்கும் உரிமை கொண்டால், ஒழுக்கத்தால், பக்தி சீலத்தால் உயர்ந்த மற்றவனுக்கு அந்த உரிமை வேண்டாமா? என்று கேட்கிறோமே, அதற்குத்தான் ஜகத்குரு அவர்கள் இப்படி உவமையால் ஜால வித்தைக் காட்டியுள்ளார்.

ஒழுக்கங்கெட்ட உயர்சாதிக்காரன் அர்ச்சனை செய்யலாம்; ஆனால் ஒழுக்கமே உருவெடுத்தவன் பிறசாதிக்காரனாக இருந்தால், அவன் ஆலயத்தில் நுழையக் கூடாது. இதுதான் ஆலயப் பாதுகாப்பா? பண்புகெட்ட குருக்கள் உள்ளே இருக்கிற அனுச்சாரம் என்றால், அதை வெளியே தூக்கி எறிய வேண்டியதுதானே; கூடாதென்கிறார் ஜகத்குரு. ஏன்? தூய்மையான பக்தன் நாலாஞ்சாதிக்காரனாக இருந்தால், அவன் புது அனுச்சாரமாம், என்ன வேடிக்கை!! ஒரு கூடை கள்ளிப் பூவும், ஒரு கூடை முல்லைப் பூவும் ஒன்றாகுமா? ஆமாம் என்கிறார் காமகோடி பீடத்தார்!! கோயிலில் இருக்கிற அனுச்சார திருமேனியைத் திருத்த வேண்டுமே தவிர, ஆசார அனுஷ்டானங்களில் சிறந்த இன்னொரு சாதிக்காரன் உள்ளே நுழையக் கூடாது; அப்படி நுழைவது புதிய அனுச்சாரத்தை நுழைப்பதாகும் என்றால் என்ன பொருள்?

படை திரட்டும் பக்தர்களே! உயர்ந்த குண நலன்களும், சிறந்த பண்புகளும் கொண்ட, பக்திநெறிகளில் மூழ்கிய சூத்திரனைவிட, ஒழுக்கங்கெட்ட புழு பூணூல் மாட்டியிருந்தாலும், அந்தப் புழுவை விடத் தாழ்ந்தவனே என்றுதானே பொருள்.

இதைத்தானே காஞ்சி காமகோடியார் கூறுகிறார்!! இப்படித்தானே ஜகத்குரு கூறுகிறார்!! அப்பா காங்கிரஸ் பக்தனே! நீ கோயிலுக்குள் நுழைவது அனுச்சாரம் என்பவன் பகைவனா? நீ உள்ளே போ; உள்ளம் நெகிழ இறைவனை வழிபடு; அர்ச்சனை செய் என்பவன் பகைவனா? ஐயா பொதுவுடைமைப் பக்தா! நீ நுழைந்தால் கோயிலின் தூய்மை கெடும் என்பவன் நண்பனா? அவனுக்கு இருக்கும் அத்தனை உரிமையும் உனக்கும் உண்டு என்பவன் நண்பனா? படைதிரட்டும் முன் இதை உணரவேண்டாமா? பாய்வதற்கு முன் இதை நினைக்க வேண்டாமா? ஆலயத்தைப் பாதுகாப்போம் வா! ஆண்டவனைப் பாதுகாப்போம் வா! என்று அழைப்பவன் உன்னைச் சூத்திரனாக்கியவன் என்பதைக் கூட உன்னால் புரிந்து கொள்ள முடியவில்லையா?

உயர்ந்தசாதிக்காரன், செயலால் எத்தகைய இழிபிறவியாக இருந்தாலும் அவன் ‘சாமானிய’ அனுச்சாரங் கொண்டவனாம். அவனால் ‘ஸா’ன்னித்தியம்’ குறைந்து விடாதாம். காரணம் என்ன தெரியுமா? ‘ஸாமானிய அனுச் சாரங்களினால் ஸான்னித்தியம் குறைந்து விட முடியாமல் மகரிஷிகள் பெரிய க்ஷேத்திரங்களைச் செய்திருக்கிறார்கள்’ என்கிறார் சரஸ்வதி சுவாமிகள். தமிழ், தமிழினம், தமிழ்ப்பண்பு ஆகியவற்றில் தீவைக்கவே ‘தீபம்’ ஏந்தித் திரியும் நா. பார்த்தசாரதியின் பரம்பரையினையோ, புரோகிதம் ராமச்சந்திர ஐயங்கார்களையோ கேட்கவில்லை; அறநெறி தழைக்க ஆலயங்காப்போம் என்னும் ரங்கசாமித்தேவர்களைக் கேட்கிறேன், பச்சைத் தமிழன் என்றால், அவன் ஒழுக்க சீலன் என்றாலும் மாபெரும் அனுச்சாரம்; ஆனால் ஆச்சாரியார் பரம்பரை எவ்வளவு பாவ அழுக்குமூட்டைகளாக இருந்தாலும் சாதாரண அனுச்சாரம் என்றால், தேவரே! நீர் யார்பின்னால் போகின்றீர் என்பது புரிகிறதா? ‘நான் குனிகிறேன், அவன் முதுகில் ஏறுகிறான்; அதுதான் எனக்கு ஆனந்தம்; அதைக் கேட்க நீயார்?’ என்று கேட்டாலும் கேட்டு விடுவீர்கள். என்ன செய்வது? ஆரியமயக்கம் என்பது அத்தனை ஆற்றல் பெற்றது என்பதைப் பெரியாரின் வழிவந்த அண்ணாவின் தம்பியா அறியமாட்டான்.

எங்களைத் தவிர வேறு எவரும் கோயிலுக்குள் நுழைவதா? அர்ச்சனை செய்வதா? ஆகமவிதிக்கு முரண்பாடல்லவா!! வேதத்திற்கு விரோதமல்லவா!! தெய்வத்திற்கே பிடிக்காதே என்பதைத் தவிர வேறு எந்த ஆதாரங்களையும் காட்டமுடியாத ஆரியகுல சிரேஷ்டர்களுக்கும், அவர் தம் தொண்டரடிப்பொடிகளுக்கும் இதோ ஓர் ஆதாரம்; காலகாலமாக வரும் பழக்கம், வழக்கமென்றெல்லாம் கதைகட்டிக் கரடிவித்தைக் காட்டுபவர்கள் இதற்குத் தரும் விளக்கமென்ன?

‘விஸ்வ இந்துபரிஷத்’ என்பது ஓர் இந்துமத அமைப்பு. உலகம்

உங்கள்

காஞ்சி

இதழை

உங்கள் இல்லத்துக்கே

அனுப்ப

உங்களது சந்தாவை

அனுப்பிவிட்டீர்களா?

தழுவிய இந்த அமைப்பின் தலைவர் மகாராணா பகவத்சிங் என்பவர். ஐதராபாத்தில் அவர் நிருபர்களுக்குப் பேட்டியளித்துள்ளார். அப்போது சில நிருபர்கள் தமிழ்நாட்டிலும், கேரளத்திலும் அரசினால் அறிவிக்கப்பட்ட புதிய அர்ச்சகர் நியமனம் பற்றிக் கேட்டுள்ளார்கள். நிருபர்கள் என்ன நினைப்போடு கேட்டார்களோ, யாமறியோம்!! மகாராணாவின் பதிலை, தமிழக, கேரள அரசுகளின் மண்டைகளில் அடிக்கும் தண்டமாகப் பயன்படுத்தக்கூடக் கருதியிருக்கலாம். ஆனால், அவர் "தாழ்த்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் பூசாரி ஆவதில் விஸ்வ இந்து பரிஷத்துக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது" என்ற பதில் ஆகமம், சாஸ்திரம் என்றெல்லாம் ஆட்டம் போட்டவர்களின் பூட்டைக் கழற்றிவிட்டது. அத்தோடு விட்டாரா மகாராணா; "குறிப்பிட்ட ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள்தான் இந்துக் கோயில்களில் பூசாரிகளாக இருக்க வேண்டும் என்பதை விஸ்வ இந்து பரிஷத் ஏற்கவில்லை" என்றும் கூறியுள்ளார். இதைக் கேட்ட பிரம்ம முகப் புத்திரர்கள், 'உப்புக்கண்டம் பறிகொடுத்த...'' என்ற பழமொழிக்கு உதாரண புருஷர்களாக மாறியிருப்பார்கள். ஐயோ பாவம்!! அதனால்தானோ என்னவோ' உப்புக்கண்டம் பறிகொடுத்தாளின் உத்தம புத்திரர்களின் ஏட்டில் இப்படியொரு செய்தி வந்ததாகத் தெரியவில்லை. நல்லவேளை, 'விடுதலை' நாளேட்டின் கூரிய கண்களுக்கு இச்செய்தி தப்பவில்லை!! ஆலயத்தில் சோஷலிஸத்துக்கு இடமில்லை என்பதை நிலைநாட்ட அருமையான உவமையைக் கூறி, வயதானாலும் சிலருக்கு அசிங்கத்தின்மேல் ஆசை விடுவதில்லை என்பதைத் தெளிவாகக் காட்டிய திருமுருக கிருபானந்த வாரியார் மகாராணாவைச் சந்திப்பது இந்த நாட்டுக்கு நலந்தருவதாகும்.

ஆலயத்தில் ஒரு சாதியார்க்கு மட்டுமா உரிமை! அனைவர்க்கும் வேண்டும்; ஒரு மொழிக்கு மட்டுமா இடம்? தமிழுக்கும் வேண்டும் எனக் கேட்பது வாரியார்க்குச் சோசலிசமாகப்பட்டுள்ளது. உடனே அதற்கு விளக்கந்தர வேண்டாமா? விளக்கமும் எளிதாக இருக்கவேண்டாமா? வாரியார் சுவாமிகளுக்குத்தான் அது கைவந்த கலையாயிற்றே. விளக்கந் தருகிறார்; கேளுங்கள்!

"சோஷலிஸக் கருத்துக்களை ஆலயங்களில் புகுத்த எண்ணக்கூடாது. எதற்கும் வரம்பு உண்டு...''

"வரம்பு'' வேண்டுமாம். யார் கூறுவது? நெய்வேலிப்புகழ் வாரியார்க்குக் கிடைத்ததே வரம்பை மறந்ததால் தானே என்பதை நாடு மறந்தாவிடும். அத்தோடு விடுவாரா?'' மனைவி தன் கணவனிடம், நான் உனக்கு மட்டும் எத்தனை நாட்களுக்கு உடைமையாக இருப்பது? இன்றிலிருந்து நான் பொதுவுடைமை என்று பேசினால் அது எவ்வளவு பெரிய தவறு'' வழி வழியாக வரும் சில மரபுகள் காக்கப்பட்டேயாக வேண்டும்'' என்று விளக்கம் கொடுக்கிறார் வாரியார்.

வாரியார், கோயில் ஒரு சாதியாரின் தனிவுடைமையாக இருக்க வேண்டும் என்று கருதுகிறாரா? அர்ச்சகரா, அவாள்தான்; அர்ச்சனைமொழியா 'அவா' மொழிதான் என்று இருக்க வேண்டும் என்று கருதுகிறாரா? அதனால்தான் கோயிலை மனைவியாக்கிக், குருக்களைக் கணவனாக்கி மகிழ்ச்சியடைகிறாரா? ஏன் இந்த வாரியாருக்குத் தள்ளாத வயதில் பொல்லாத கற்பனைகள் என்று புரியவில்லை. என்ன செய்வார் அவர்? யாரையுமே சகோதரிகளாக எண்ணாத சந்ததியார் வீட்டுச்சோற்றைத் தின்றுத் தின்று, அனந்தராம தீட்சிதராக மாறிவிட்டார்.

இழந்துவிட்ட உரிமையை மீட்க நினைப்பது ஒருபெண் தன்னைப் பொதுவுடைமை என்பதாகும் என்றால், வாரியாரைப் பெற்றத்தமிழ்த் தாய், தன்வயிற்றில் பிரண்டையைக் கட்டிக் கொள்ளட்டும்!

"அப்பாடா! காஞ்சி காமகோடியாரின் ஒரேயொரு தவளைக்குஞ்சு உன்னைப் படுத்திய பாட்டைப் பார்த்தாயா?'' என்று துள்ளாட்டம் போட நினைக்கிறாயா?

ஓ! என் கொடிய நண்பனே! ஆரியச்சேற்றில் அமிழ்ந்துகிடக்கும் உன்னை வெளியில் இழுத்துப் போட்டு, அழுக்குப் போகக் குளிப்பாட்ட, அதோ, தன்தள்ளாத வயதிலும் ஊர் ஊராகச் சுற்றித் திரிகிறாரே தந்தைபெரியார், அவர் இன்னும் ஆயிரமாண்டுகள் வாழ வேண்டும் என்று வாழ்த்துவதைத் தவிர வேறென்ன சொல்வேன்!!

★

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வொன்றைக் கேட்கும் தோரணையில் என்பக்கம் முகத்தைத் திருப்பினார். ஆனால் அதற்குள் நானே பேசினேன்.

"என்னைப்பற்றித்தானே கேட்கப்போறீங்க? நான்கூட ஒரு ஆபீஸ்லே வேலை செய்துக்கிட்டிருக்கேன்...'' என்றேன்.

சிறிது நேரம் இருவரும் மௌனமாக நின்றிருந்தோம்.

'வந்து ரொம்ப நேரமாகுது. இன்னும் 'டிக்கின்ஸன்' மருந்துக் கடைவரை போக வேண்டியிருக்கு. வரட்டுமா?'' என்று கேட்டு விட்டு, சரவணன், உங்களோட வாழ்க்கையியே நீங்க செய்திருக்கிற இந்தத் தியாகம், உங்களைப் பற்றி தெரிஞ்சவங்களோட மனங்களில் கண்டிப்பா நிற்கும்—என்னையும் சேர்த்துத்தான் சொல்றேன்...'' என்றபடி மெல்ல அடிவைத்தேன்.

அவர் என்னையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தார்.

'எனக்கென்று ஒருவாழ்க்கை' என்று அவரிடம் சொன்னது என் நினைவுக்கு வருகிறது. மெதுவாகத் திரும்பிப்பார்த்தேன். அவர் இன்னும் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். என்னையுமறியாமல் முகம் திருப்பிக்கொள்கிறது.

தூரத்தில் தெரியும் 'டிக்கின்சன்' மருந்துக் கடையிலிருந்து, மருந்து பாட்டில் ஒரு கையிலேயும், கையிடுக்கில் ஒரு கட்டையை கால் போல ஊன்றிக் கொண்டு உந்தி உந்தி நடந்தபடி, 'டொக்டொக்' என்ற சத்தம் முன்னெழும்ப அவர் ...'எனக்கென்று இருக்கிற வாழ்க்கை'யின் அந்தரங்க ஆத்மா—வந்து கொண்டிருக்கிறார்.

இதுவரை பேசிய பேச்சுக்கள்—நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் மறைந்த நிலையில் மனச்சுமை கொஞ்சமாய் குறைந்திருக்கிறது. கிட்டே நெருங்கி வந்துகொண்டிருக்கும் என் கணவரைப் பார்த்து லேசாகப் புன்னகைத்தேன். இருந்தாலும், 'வாழ்க்கையில் ஒவ்வொருவர் செய்யும் காரியத்திற்கும் ஒவ்வோர் பெயர் வருகிறது. சரவணன் செய்த காரியத்தைத் 'தியாகம்' என்று சொன்னால், நான் செய்தது?......அதை எப்படி நானே சொல்லிக்கொள்வது?...'' என்று வாய் முணுமுணுத்துக் கொள்கிறது—அது மனச்சாந்திக்காக ஏற்பட்ட முணுமுணுப்போ!

*

நீரும் நெருப்பும்

அந்தத் தமிழ் வீரன் இடியேறுண்ட நாகமாக — வேல் தாக்கிய வேழமாக — அனலிடை சிக்கிய புழுவாக - வேதனைக் கோட்டின் விளிம்பில் நின்றுகொண்டு, எதைப் பற்றியுமே சிந்திக்காமல் எதன் மீதும் நாட்டங் கொள்ளாமல் மயக்க நிலையில் இருந்தான்!

அவ்வீரன் அறுசுவை உணவு அருந்தி ஆகிவிட்டன நாட்கள் பல! உறக்கம் அவனைத் தீண்டவே அச்சப்பட்டது! உவகை பொங்க உற்றார் உறவினருடன் உரையாடுவதையும் நிறுத்திக்கொண்டு விட்டான் சின்னாட்களாக! உற்ற விடத்து உறுபெரும் உதவி புரியும் உயிரனைய கெழுதகை நண்பர்களிடம் பேசுவதையே மறந்துவிட்டான்!

வானும் நிலாவும் அவனைப் பெரிதும் வாட்டி வதைத்தன!

தேனும் பலாவும் அவனுக்கு எட்டியைப் போன்று கசப்பினைத் தந்தன!

மலர்ந்த அல்லியும், மணம் வீசிய மல்லிகையும்கூட அவனுக்கு வேம்பெனவே வெறுப்பை ஊட்டின!

துள்ளி ஓடுகின்ற புள்ளிமானின் எழிலில்—ஆடுகின்ற மயிலின் அழகில்—பைந்தமிழ்க் கீதம் இசைக்கும் வண்ணம் நிறைவண்டினத்தின் சுவை சேர் சுருதியில் அவ்வீரன் இன்பம் கண்டானில்லை!

பட்டு மெத்தை விரித்தாற் போன்று பச்சைப் பசேலென்று உள்ள பாங்கான பசும் புல்தரைகூட அவன் பாதத்தை மெத்த வருத்தியது!

கவலைத் திவலைகள் கார்மேகம் போன்று கப்பிக்கொண்டன அவ்வெழிலுடை வீரனை! சிலைத்தலும் மலைத்தலும் இல்லாத சிந்தனைத் தெளிவு படைத்த அவன், சித்தம் இழந்து பித்தம் பிடித்தவனாய் ஏக்கத்தின் எழிலுருவாய் மாறிவிட்டான்!

உளநூல் அறிஞர்கள் உரைப்பதற்கொப்ப எந்த ஒரு மனிதனும் மட்டற்ற மகிழ்ச்சிக்கு ஆளாகும் போதும் — தாங்கவொண்ணாத் துயரால் தாக்கப்படும் போதும் செதுக்கி வைத்த சிற்பமாக மாறிவிடுகிறான் அல்லவா?

களம் பல கண்ட மாவீரன்— இசை மிழற்றாத தும்பியாக—மீட்டாத வீணையாக — அலை ஓய்ந்த கடலாக செய்வகை அறியாது சோர்ந்திருப்பதேன்?

ஓர் ஆரணங்கு! வன்மை மிக்க அந்த வீரனை — மென்மை மிக்க மங்கை யொருத்தி மடக்கிவிட்டாள்!

ஒரு நாள்! மாலை நேரம்! பொதிகைமலைத் தென்றல் எங்கும் இனிமையாகத் தவழ்ந்துகொண்டிருந்தது!

ஆணும் பெண்ணுமாகிய அன்றிற் பறவைகள் அகங் குளிர வையகத்தை மறந்து விளையாடுகின்ற மாலை நேரம்! பகற் பொழுதெல்லாம் பாங்கான பசும்புல் வெளியிலே மேய்ந்து பசி நீங்கிப் பால் சுரக்க, தான் ஈன்ற கன்றின் நினைவு வந்து கொட்டிலை நோக்கிப் பசு விரைகின்ற மாலை நேரம்!

— கலவை பா. வரதன் —

குழலையும் யாழையும் வெல்லும் அமுதனைய இசை மழை எங்கும் பொழிந்து கொண்டிருக்கும் மாலை நேரம்!

"வானுற நிவந்த மேனிலை யெங்க"னும் என்று பண்டைப் புலவர்களால் புகழ்ந்துரைக்கப் பட்ட மனைகள்தோறும் மங்கள விளக்குகள் ஏற்றப்படுகின்ற மாலை நேரம்! இவ்வண்ணம் எச்சூழ் நிலையும் இன்பமயமாகக் காணப்படுகின்ற மையலுறு மாலை நேரத்தில், செடி கொடிகள் செறிந்து மிடைந்து செழித்து வளர்ந்து காணப்படுகின்ற கவினுறு கழிக் கானற் சோலை அருகில் தையல் ஒருத்தி தனியே இருந்து தளிர்நடை பயின்று கொண்டிருந்தாள்!

இம்மங்கை யெழிலை அள்ளிப் பருகி — அளவிலா இன்பம்கொள்ள எண்ணி — அந்தி நேரத்திலே ஆங்குச் சென்ற ஆணழகன், அரல் போன்ற கூந்தலும் — பிறைபோல் நுதலும்—பவளவாயும் — பொன்நிற மேனியும் வாய்க்கப் பெற்ற வடிவழகியைக் கண்டான்! பருவத்தின் செழிப்பு நன்கு படர்ந்திருந்த அப்பாவைமீது மையல் கொண்டு விட்டான்!

இமை மூடித் திறப்பதற்குள் இருவர்தம் நெஞ்சமும் இணைந்து விட்டன!

இது நடந்து முடிந்த நாள் தொட்டு அவ்வீரன் சோகம் நிரம்பிய மனிதனாகக் காணப்பட்டான்.

நண்பனது இவ்வாட்டம் கண்டவன் — உனக்கு ஏன் இத்துயர் வந்துற்றது என்று வினவ அதற்குப் பதில் சொல்கிறான் குறுந்தொகைப் பாடல் (95) மூலமாக!

"மால்வரை யிழிதருந்
தூவெள் ளருவி
கன்முகைத் ததும்பும்
பன்மலர்ச் சாரற்
சிறுகுடிக் குறவன்
பெருந்தோட் குறமகள்
நீரோ ரன்ன சாயல்
தீயோ ரன்ன வென்னுர
வித்தன்றே."

★

இலக்கியம்

அறிவிப்பு

வினா-விடைப் பகுதிக்கு வாசகர்களது வினாக்கள் வரவேற்கப்படுகின்றன. சுருக்கமாகவும் தெளிவாகவும், பண்பாடுள்ளனவாகவுமிருக்கவேண்டும். அஞ்சலட்டையில் எழுதினாலே போதும்.

— ஆசிரியர்.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-2